# 21

## பெண்ணுரிமை

ஆண்களைவிடக் கீழானவர்களாக பெண்களை மதிப்பிடுதலும் உரிமைகளைத் தடுத்தலும் தற்போது மாற்றம் பெற்றுள்ளன. ஆண், பெண் பால் வேறுபாடுகள் களையப்பட்டு சமத்துவ உரிமைகள் தரப்படுவதே பெண்ணுரிமையைப் பெறுவதற்கான வித்தாகும். பொறுமையும் ஆற்றலுமுடைய பெண்களுக்கு ஆண்களைவிடக் கூடுதலான உரிமைகளைத் தருதல் மூலம் அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான உரிமைகளும் சட்டங்களும் அரசியலமைப்பு போன்றவற்றின்படி தரப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிக் காணலாம்.

### ஐக்கிய நாட்டவையும் பெண்ணுரிமைகளும்

பாலின சமத்துவத்தை நிலைநாட்டி பெண்களுக்குச் சம உரிமைகளைப் பெற்றுத்தர ஐக்கிய நாட்டவையானது பல வழிகளை மேற்கொண்டுள்ளது. பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது அதன் நோக்கங்களுள் ஒன்று. அவர்களுக்கு உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளாக பல வழிகளை ஏற்பாடு செய்துள்ளது.

1946-இல் ஐக்கிய நாட்டவையின் பொருளாதார சமூக அமைப்பின் மூலம் பெண்கள் ஆணையம் உருவாக்கப்பட்டது. அதன்மூலம் சமூகம், பொருளாதாரம், கல்வி போன்ற பல துறைகளில் ஆய்வு செய்து அறிக்கைகள் தயாரித்து அவற்றின் வாயிலாக [illegible] வகை செய்யப்பட்டது.

Scanned by TapScanner

1948-இல் வெளியிடப்பட்ட பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனமும் பெண்கள் உரிமைகளைப் பற்றிக் குறிப்பிட்டது. அதன் 2ஆம் பிரிவும், 7ஆம் பிரிவும் பாகுபாடுகள் ஏதுமின்றி உலக மக்களின் உரிமைகளையும் அவற்றின் பாதுகாப்புக்கான உரிமைகளையும் குறிப்பிட்டன. அதிலும் சம உரிமை உண்டென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

1952-இல் நடைபெற்ற ஐக்கிய நாட்டவையின் பெண்களின் அரசியல் உரிமைகள் குறித்த மாநாடு, பெண்களுக்கான வாக்குரிமை, ஆட்சியியலில் பாகுபாடற்ற பங்கு ஆகியவற்றை வலியுறுத்தியது.

1967-இல் பெண்களுக்கிடையிலான பாகுபாடுகளை நீக்கி, பெண் சமத்துவத்தை உருவாக்க பெண்கள் நிலை பற்றிய ஆணையம் எழுதப்பட்ட கருத்தினை வெளியிட்டது. இவ்வடிப்படையில் பல பன்னாட்டு மாநாடுகள் கூட்டப்பட்டு பெண்களின் நிலை உயர வகை செய்யப்பட்டது. 1975-இல் மெக்ஸிகோ, 1980-இல் கோப்பர் நிக்கஸ், 1985-இல் நைரோபி, 1995-இல் பெய்ஜிங் ஆகிய இடங்களில் மாநாடுகள் கூட்டப்பட்டன. அவற்றின் மூலம் பெண்களின் பலவித உரிமைகள், பாதுகாப்பு, சமத்துவம் போன்றவற்றைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1993-இல் நடந்த பன்னாட்டு மனித உரிமைகள் மாநாட்டில் "பெண்களின் உரிமைகள் மனித உரிமைகளே" என்ற கருத்து உறுதியாக வலியுறுத்தப்பட்டது. பல நாடுகளில் உள்ள பலவிதமான பெண்களை சீக்கல்கள், கொடுமைகள், பாதுகாப்பின்மை போன்றவற்றிலிருந்து விடுவிக்க ஐக்கிய நாட்டவை பல செயல்களை நடைமுறைப்படுத்துகிறது. இவ்வடிப்படையில் இந்திய அரசியலமைப்பு தரும் பல உரிமைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

**இந்திய அரசியலமைப்பில் பெண்ணுரிமை**

இந்திய அரசியலமைப்பு ஆண்களும், பெண்களும் சமமானவர்கள் என்ற நோக்கில் பெண்களுக்கென பல உரிமைகளை நல்கியுள்ளது. பாலியல் பண்புகளின் அடிப்படையில் நிலவும் பலவகையான ஏற்றத்தாழ்வுகளைத் தீர்க்க வகை செய்துள்ளது. பெண்களிடையே தன்னம்பிக்கை, தலைமைப் பண்பு ஆகியவற்றை

Scanned by TapScanner

ஏற்படுத்தித் தந்துள்ளது. பெண்களைச் சுரண்டக்கூடிய பல காரணங்களையும் ஆய்ந்தறிந்து அவற்றை நீக்க வழிவகுத்துள்ளது. பெண்ணுரிமையின் பல பிரிவுகள் பின்வருமாறு:

**சமத்துவ உரிமை**

இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சமூக, அரசியல், பொருளாதாரப் பண்புகளில் சம நீதி காட்டப்பட வேண்டுமெனக் கூறுவது பெண்களுக்கும் பொருந்தக் கூடியதே. இந்திய அரசியலமைப்பின் 14ஆம் பிரிவு அனைத்து மக்களுக்கும் சமத்துவ உரிமையை நல்கியுள்ளது. பிரிவுகள் 15 (1) மற்றும் 15 (3) ஆகியன பலதரப்பட்ட சிறப்புரிமைகளைத் தந்துள்ளன. இவ்வுரிமைகளுடன் 16 (1) மற்றும் 16 (2) போன்ற பிரிவுகள் பணியாற்றல் மற்றும் வேலைக்கமர்த்துதல் போன்றவற்றில் சமத்துவம் தரப்பட வேண்டுமென்கின்றன.

**சுதந்திர உரிமை**

அரசியலமைப்பின் மூன்றாம் பகுதியில் அடிப்படை உரிமைகள் என்ற நிலையிலும், நான்காம் பகுதியில் அரசு வழிகாட்டும் நெறிக்கோட்பாடுகள் முறையிலும் உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்துக்களை வெளியிடும் உரிமை, திருமண உரிமை, சமய உரிமை, பாதுகாப்பு உரிமை, சுரண்டல்களிலிருந்து காத்துக் கொள்ளும் உரிமை, தொழில் செய்யும் உரிமை, இந்தியப் பகுதிகளுக்குள் சென்று வரும் உரிமை ஆகியனவும் அவர்களுக்கு உண்டு. இவை பெண்ணுரிமை முயற்சிகள் சார்புடையவை.

**அரசியல் உரிமை**

இந்தியாவில் ஆண்களைப் போல பெண்களும் அரசியல், பொதுவாழ்வு ஆகியவற்றில் ஈடுபட, தேர்தலில் போட்டியிட, வாக்களிக்க உரிமையுடையவர்கள். தாம் விரும்பும் பொதுப் பணியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அரசின் கொள்கைகளை மதிப்பிடவும் கருத்தளிக்கவும் உரிமையுண்டு. எவ்விதமான பாகுபாடுகளும் பாராட்டாமல் சமமான அளவில் பெண்கள் அரசியல் உரிமைகளைப் பெற்று மேம்பட வகை செய்யப்பட்டுள்ளது.

## சமூக உரிமை

இந்தியச் சமூக அமைப்பில் பெண்களின் நிலையை உயர்த்தி, பாதுகாப்புடன், பாரபட்சமின்றிச் செயல்பட பல உரிமைகளை இந்திய அரசியலமைப்பு தந்துள்ளது. திருமணம் செய்து கொண்டு சமூகத்தின் அடிப்படை அமைப்பான குடும்பத்தை அமைத்துக் கொள்ளவும், திருமண உறவை ரத்து செய்து கொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இவற்றிலெல்லாம் அவர்கள் ஆண்களுக்குச் சமமான உரிமைகளைக் கொண்டுள்ளனர். சமூகம், அரசு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற உரிமை உண்டு. குழந்தைகளைப் பெற்று பாதுகாப்பாக வளர்க்க உரிமையுடையவர்கள். பணிபுரிபவர்களுக்குத் தேவையான மருத்துவ விடுப்பு, ஓய்வு போன்றவற்றை அவர்கள் பெறுகின்றனர். அப்போது ஊதியம் பெறும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் கடமையைச் செவ்வனே நிறைவேற்றும் உரிமை உடையவர்கள்.

## கற்கும் உரிமை

மனித உரிமைகளுள் கல்வி கற்பதற்கான உரிமை பெண்களுக்கும் உண்டு. இந்திய அரசியலமைப்பின் 15-ஆம் பிரிவும் 29-ஆம் பிரிவும் ஆண்களைப் போல பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டென்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இது மனித உரிமைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவிலும் 26-ஆம் பிரிவுவிலும் தரப்பட்டுள்ள உரிமைகள் சார்ந்தவையாயுள்ளன. 6 முதல் 14 வயது முடியவுள்ள ஆண் பெண் குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி பெற உரிமையுண்டு. கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் பெண் கல்வியின் வளர்ச்சியை நன்கறியலாம்.

| ஆண்டு | கல்வி கற்ற பெண்கள் விழுக்காடு |
|---|---|
| 1901 | 0.6 |
| 1941 | 7.3 |
| 1981 | 29.8 |
| 2001 | 53.7 |
| 2011 | 65.5 |

Scanned by TapScanner

பெண்கள் உடற்பயிற்சிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, கல்வி முறையிலான பயிற்சிகள் ஆகியவற்றிலும் உரிமை கொண்டுள்ளனர். கல்விச் சலுகைகள், கடன் வசதி, இலவச வசதி ஆகியனவும் அவர்களுக்குத் தரப்பட்டு அவர்களது கல்வி வளர்ச்சி வலுப்பெறப் பல உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

## திருமணம் சார்ந்த உரிமைகள்

ஆங்கில அரசு இந்தியாவில் நிலவிய காலத்திலேயே பெண்களின் உரிமைகள் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. 1823-இலேயே சதி அல்லது உடன்கட்டையேறுதல் என்ற அநாகரிகக் கொடுமை, சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டது. 1850இன் சாதிகள் பற்றிய சட்டம், 1856 ஆம் ஆண்டின் விதவைகள் மறுமணச் சட்டம் போன்றவை பெண்களுக்கான கொடுமைகளை நீக்க வகை செய்தன. குடும்பச் சட்டங்களிலும் அந்நிய அரசு தனித்து ஒதுங்கவில்லை. 1872ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டங்கள் வாயிலாக கலப்புத் திருமணங்கள் ஏற்கப்பட்டன. அதனால் பெண்களின் திருமண வயது 14 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் 1950-இல் இந்து விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது. 1954-ஆம் ஆண்டின் சிறப்பு திருமணச் சட்டம், 1956-இல் உருவான இந்து வாரிசுரிமைச் சட்டம், தத்து எடுத்துக் கொள்ளும் உரிமைச் சட்டம், 1961ஆம் ஆண்டின் வரதட்சணை ஒழிப்புச் சட்டம், 1971-இல் குழந்தைப்பேறு பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. அவை பெண்களின் நிலையை உயர்த்தி அவர்களது உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்ள உதவி செய்தன. 1869-இல் இயற்றப்பட்ட மண விலக்குச் சட்டம் பலகுறைகளைக் கொண்டிருந்தது. 1956 ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் 18 வயது நிரம்பிய பெண்கள் தம் விருப்பத்திற்கிணங்க மறுமணம் செய்து கொள்ள அனுமதித்தது. இச்சட்டத்தின் 15ஆம் பிரிவின் மூலம் விவகாரத்து பெற்றவர் சட்டப்படி

மீண்டும் ஓராண்டு கழித்து மறுமணம் செய்து கொள்ள உரிமை தந்தது. 1976 ஆம் ஆண்டுச் சட்டம் அந்த ஓராண்டு கால இடைவெளியை நீக்கியது.

1949ஆம் ஆண்டின் இந்து திருமண ஏற்புடைச் சட்டம், 1955ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் போன்றவற்றின் மூலம் பெண்களின் திருமணம் பற்றிய திட்டவட்டமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1947இல் மகாராஷ்ட்ரா சட்டமன்றம் "பம்பாய் இந்து மணவிலக்குச் சட்டத்தை" இயற்றியது. 1949-இல் "பலதார மணத் தடைச் சட்டம்" இயற்றப்பட்டது. 1955ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டமானது 1956, 1960, 1964, 1976, 1978 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டது. அதனால் பெண்களின் உரிமைகள் கூடின. 1954-இல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டம் வாயிலாக ஒருமைப்பாட்டுணர்வு நோக்கில் இந்தியத் திருமணங்கள் ஏற்கப்பட்டன.

1956-ஆம் ஆண்டில் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமைகள் வகுத்துத் தரப்பட்டன. ஆயினும் ஒருவர் தன் மனைவியின் ஒப்புதலைப் பெற்றே தத்து எடுத்துக் கொள்ளலாம். திருமணமானவர்களைத் தவிர திருமணமாகாத பெண்கள், விதவைகள் ஆகியோர் 15 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றார்கள். ஒரு மனைவி தன் கணவரிடமிருந்து தனியாகப் பிரிந்து வாழும் போது ஜீவனாம்சம் பெற உரிமையுண்டு. 1961-இல் "வரதட்சணை ஒழிப்புச் சட்டம்" இயற்றப்பட்டது. அதன் மூலம் மணப்பெண்கள் சமூகக் கொடுமையிலிருந்து காக்கப்பட்டனர். அச்சட்டத்தின் இரண்டாம் பிரிவு வரதட்சணையை "ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருக்கு திருமணத்திற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தருவது" என்ற விளக்கம் தருகின்றது. ஆனால் அது "மஹர்" என்னும் பணத்தை உள்ளிட்டதல்ல. பெண்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளின் வற்புறுத்தல்களால் 1984-இல் வரதட்சணை ஒழிப்புச்சட்டம் இயற்றப்பட்டு

Scanned by TapScanner

அது 2, அக்டோபர் 1985 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஜம்மு காஷ்மீர் மாநிலம் தவிர பிற மாநிலங்களுக்கு செல்லுபடியாகுமெனப்பட்டது. திருமணத்தின்போது மணப்பெண்ணுக்குத் தரப்படும் வெகுமதிகள் வரதட்சணைக்கு உட்பட்டவையல்ல. வரதட்சணை ஒழிப்புச் சட்டம் பெண்களின் வேதனைகளை நீக்கி அவர்களது உரிமைகளைக் காக்கின்றது.

### திருமணம் பற்றிய இந்துச் சட்டம்

இந்துச் சட்டப்படி குடும்பம், மணஉறவு போன்றவற்றில் பெண்களுக்குச் சமஉரிமை உண்டு. 1872-இல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டம் 1926-இல் தேவைக்கு ஏற்றவாறு திருத்தப்பட்டது. 1946-இல் இந்து திருமண இயலாமை நிறுத்தச் சட்டம் மூலம் கலப்புத் திருமணம் அங்கீகரிக்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டின் திருமணச் சட்டம் ஒருதார மணத்தை வலியுறுத்தியது. இந்து திருமணச் சட்டம் (1955) இல் இருந்த பெண்ணின் குறைந்தபட்ச திருமண வயது 17 லிருந்து இப்போது 18 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டு, பின்பற்றப்படுகிறது. 1984-ஆம் ஆண்டின் சிறப்புத் திருமண சீர்திருத்தச் சட்டம் மணவிலக்கு பற்றிக் கூறுகின்றது. 1984-ஆம் ஆண்டின் குடும்ப நீதிமன்றச் சட்டம், குடும்ப அமைதியைக் காக்க ஆண், பெண் இருவரிடமும் சமாதானத்தை வலியுறுத்தியது. 1987-ஆம் ஆண்டின் திருமணச் சட்டத்திருத்தச் சட்டவரைவு மணவிலக்கு பற்றிய மாற்றங்களுக்கு வழிவகுத்தது. மணவுறவு என்பது சட்டப்படி ஏற்கப்பட்ட ஒரு உரிமையாகும்.

### இஸ்லாமிய மற்றும் கிறித்துவச் சட்டங்கள்

கூட்டுறவுக்கு உட்பட்ட இஸ்லாமியர், மணஉறவை திருமணத்தின் அடிப்படைக் கோட்பாடாகக் கொள்கின்றனர். திருமணம் என்பது பெண் பூப்படைந்தபின் மேற்கொள்ளப்படும். தன்னை திடமனத்துடன் உதறித் தள்ளாத கணவருடன் கூடிவாழ்பவளே மனைவி என்பது திருமணத்தின் போது தீர்மானிக்கப்படும் மஹர்

பணம் மணமகளின் சொத்தாகும். வயதுக்கு வந்த பின்னரே திருமணம் செய்ய வேண்டுமென்பதை மனைவி வற்புறுத்தலாம். ஷபி மற்றும் மாலிகி சட்டங்கள் மனைவிக்கான மணவிலக்கு உரிமையைத் தந்துள்ளன. இஸ்லாமியப் பெண்கள் மணவிலக்கு பெற கொண்டுள்ள உரிமைகளைப் போல் பிற சமயப் பிரிவினருக்கு உரிமையில்லை. வயதுக்கு வராத இஸ்லாமியப் பெண்ணுக்கு அவளுடைய தகப்பனார் பாதுகாவலராக இருக்கும் போது அவளது திருமணத்தை வேறொரு பாதுகாவலரால் நடத்தி வைக்க முடியாது. இருப்பினும் இஸ்லாமியப் பெண்கள் தங்களின் உரிமைகளைக் கடுமையாகப் போராடியே பெற வேண்டியவர்களாயுள்ளனர்.

மணவுறவு, மணவிலக்கு மற்றும் திருமணம் போன்ற நிலைகளில் கிறித்துவர்களின் தனிநபர் சட்டம் இந்து மற்றும் முஸ்லீம் சட்டங்களிலிருந்து மாறுபட்டது. கிறித்துவப் பெண்கள் ஆண்களுடன் சம உரிமையுடையவர் களாயுள்ளனர். கிறித்துவப் பெண்களுக்கு கல்வியறிவு, பொருளியல் சுதந்திரம், பணி உரிமை ஆகியவை தரப்பட்டுள்ளன. 1954ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டம், 1969ஆம் ஆண்டின் இந்திய மணவிலக்குச் சட்டம் கிறித்தவர்களுக்கும் பொருந்தக்கூடியவை. இந்திய மணவிலக்குச் சட்டத்தின் 36ஆம் பிரிவின்படி மணவிலக்கு செய்யப்பட்ட மனைவி கேட்டால் ஜீவனாம்சம் தரவேண்டியது கணவனின் கடமை. மணஉறவு அனைவருக்கும் பொதுவாயினும் மணவிலக்கு பெண்களைப் பாதிக்கக் கூடியதேயாகும்.

**மலைவாழ் மக்களுடைய பெண்களின் உரிமைகள்**

மலைவாழ் மக்களைப் பற்றி இந்திய அரசியலமைப்பு குறிப்பிட்டிருந்தாலும் அவர்களது திருமணம், மணவிலக்கு, சொத்துரிமை ஆகியவற்றைப் பற்றி தனிச்சட்டங்கள் இயற்றவில்லை. மலைவாழ் பிரிவுப் பெண்கள் சட்டக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பாரம்பரிய அடிப்படைப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். அவர்களுடைய சட்டங்கள்

இடத்திற்கு இடம் மாறுபட்டே காணப்படுகின்றன. மலைவாழ் பிரிவு மக்களுக்கு தகப்பனார் சொத்தில் உரிமை இல்லையெனினும் திருமணமாகாத பெண் தன் தகப்பனார் சொத்தைச் சார்ந்தே வாழ்கிறாள். ஆனால் திருமணமான பெண் விதவையாக ஆனாலும் அல்லது மணவிலக்கு பெற்றாலும் இத்தகைய உரிமைகள் கிடையாது. விதவைகள், இறந்த கணவரின் சொத்துக்கு முழு உரிமையுடையவர்கள். விதவையின் இறந்த கணவரது சொத்துக்களை அவளுடைய இறந்த கணவனின் சகோதரர்கள் அபகரித்துக் கொள்கின்றனர். மணவிலக்கு பெற்ற பெண்ணுக்கு சொத்துரிமையோ ஜீவனாம்ச உரிமையோ கிடையாது. பெண்ணும் ஒரு பொருளாதாரப் பொருளாகவே கருதப்படுகின்றாள்.

**பொருளியல் உரிமைகள்**

இன்று மனித உரிமைகளில் முன்னணியில் நிற்பது பொருளியல் உரிமைகளாகும். பொருளாதாரத்தின் தன்மை இல்லையேல் ஆண், பெண், குடும்பம், சமுதாயம் போன்றவை சிறப்படையாது. பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட பல பொருளாதார உரிமைகள் தேவையாயுள்ளன.

இந்திய அரசியலமைப்பின் 41 மற்றும் 42 ஆம் பிரிவுகள் ஆண், பெண் என்ற இருசாராருக்கும் பணிகளைத் தேர்ந்தெடுப்பதில் சம உரிமையையும், பணிச் சூழல்களை ஏற்படுத்தித் தருவதையும் அரசின் கடமையெனவும் சுட்டிக் காட்டியுள்ளன. அவற்றுள் கல்வி வசதி, மருத்துவ வசதி மற்றும் இருப்பிட வசதி போன்றவையும் அடங்கும். இந்திய அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் சமஊதியத்தைப் பற்றிக் கூறுகின்றது. அவ்வடிப்படையில் தான் 1978-இல் இந்திய அரசு சம ஊதியச் சட்டத்தை இயற்றியது. 1990-இல் தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் இயற்றப்பட்டு பெண் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

**பிற உரிமைகள்**

இந்திய அரசியலமைப்பின் 39-A பிரிவு, பெண்கள் தமது உரிமைகள் மீறப்பட்டதாகக் கருதும் போது பொருளாதார வசதி இல்லையென்றால், இலவச சட்ட உதவிகளைப் பெற வகை செய்கின்றது.

இந்திய அரசியலமைப்பின் நெறிமுறைக் கோட்பாட்டின் 42-ஆம் பிரிவு நியாயமான பணிச்சூழல்களில் பணியாற்றும் திருமணமான பெண்களின் மகப்பேறு காலத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு 1961-இல் மகப்பேறு உதவிச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி மத்திய, மாநில அரசுகளின் தொழிற்சாலைகள், சுரங்கம், அரசு அலுவலகங்கள், பத்துக்கு மேற்பட்டோர் பணியாற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் திருமணமான பெண்களின் பேறுகாலத்திற்கு முன்பும் பின்புமாக 12 வாரங்கள் விடுப்பு எடுத்துக் கொள்ள உரிமை தரப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் அவர்கள் முழுமையான ஊதியத்தைப் பெற உரிமையுடையவர்கள். குழந்தை பிறந்த பின் 15 மாதங்கள் வரை குழந்தையின் கவனிப்பு மற்றும் பராமரிப்புக்காக வேலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் இரண்டு முறை ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம். மகப்பேறு சீர்திருத்த மசோதா 2016 இன்படி 12 வாரங்களாக இருந்த விடுப்புக் காலம் 26 வாரங்களாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகும் தேவைப்பட்டால் மருத்துவரின் சான்றிதழ் பெற்று, கூடுதலாக 12 வாரங்கள் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம்.

பெண்களுக்கு கல்விக் கூடங்கள் மற்றும் பெண்களுக்கான வேலை வாய்ப்பு ஆகியவற்றில் 30 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 15 (3) ஆம் பிரிவு இடஒதுக்கீட்டு முறையை ஏற்றுக் கொண்டுள்ளது.

Scanned by TapScanner

1986ஆம் ஆண்டில், பெண்களை தரக்குறைவாக வர்ணித்தல் தடுப்புச் சட்டப்படி (The Indecent Representation of Women (Prohibition) Act) பெண்களைக் கேவலமாகப் பேசி அதன் மூலம் பாலுணர்வைத் தூண்டக்கூடிய வழிகளில் ஈடுபடுவது குற்றம். நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், புகைப்படங்கள், வரைபடங்கள், பல ஊடகங்கள் வாயிலாக பெண்களைக் கேவலமாக வெளிப்படுத்தினால் அத்தகைய சட்டத்திற்குப் புறம்பான செயல்களுக்காக ரூ.2000/- அபராதமும் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்படும். முதல் முறைக்கு இத்தகைய தண்டனைகள் வழங்கப்பட்ட பின்னரும் அந்த நபர் அம்முறையற்ற செயலில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் ஐந்தாண்டு சிறைத்தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும் விதிக்கப்படும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14, 21 மற்றும் 51 A பிரிவுகளின்படி இச்செயல்முறை ஏற்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 243இன் படியான பஞ்சாயத் ராஜ் சட்டத் திருத்தம் 73, 74-இன்படி 1992-இல் இயற்றப்பட்ட சட்டப்படி பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு உள்துறை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 44ஆம் பிரிவுப்படி பால் வேறுபாடுகளை நீக்க வழி செய்துள்ளது.

**சொத்துரிமை**

இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் போது பலவித சொத்துரிமைச் சட்டங்கள் வழக்கிலிருந்தன. "மிட்டாச்சார முறை" இந்தியாவின் பல பகுதிகளில் செயல்பட்டது. வங்காளத்தில் "தயாபாக முறை" இருந்தது. தென்னகத்தில் "மருமக்கள் தாயம்", "அலிய சந்தானா" போன்றவை இருந்தன. இந்தியாவில் சொத்துரிமை மற்றும் வாரிசுரிமை தனியார் சட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

Scanned by TapScanner

1956ஆம் ஆண்டி "இந்து வாரிசுரிமைச் சட்டம்" இயற்றப்படுவதற்கு முன் பாரம்பரிய இந்துச் சட்டம் செயல்பட்டது. அதன்படி ஒருவர் ஆண் வாரிசின்றி இறந்துவிட்டால் மகள் அச்சொத்துக்கு உரிமையுடையவளாயிருந்தாள். 1929ஆம் ஆண்டின் இந்து சொத்துரிமைச் சட்டம் (The Hindu Law of Inheritance) 1939ஆம் ஆண்டின் இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம் (Hindu Women's Right to Property Act) 1937ஆம் ஆண்டின் சொத்துரிமைச் சட்டம் மூலம் விதவைகளுக்கு சொத்துரிமை தரப்பட்டது. விதவை அல்லது விதவையாவதற்குமுன் இறந்துவிட்ட மகன் ஆகியோரின் சொத்துகளுக்கு அவ்விதவை உரிமையாளராக்கப்பட்டார். ஆனால் பெண்மக்களுக்கு சொத்துரிமை தரப்படவில்லை. எனவே பெண்களின் சொத்துரிமை என்பது மகன் அல்லது விதவையைவிட மிகக் குறைவானதாகவே இருந்தது.

1939-இல் இயற்றப்பட்ட சொத்துரிமை திருத்தச் சட்டம் சொத்துரிமையை விரிவு செய்தது. அதன்படி மகனின் மகள், மகளின் மகள், சகோதரி ஆகியோருக்கும் சொத்துரிமை தரப்பட்டது. சொத்தைப் பெற உரிமை தரப்பட்டாலும் அவற்றை விற்பதற்கோ, அடகு வைக்கவோ அல்லது தானமளிக்கவோ அவர்களுக்கு உரிமையில்லை. எனவே பெண்ணானவள் "தர்மகர்த்தா" என்ற நோக்கிலேயே சொத்துரிமையைப் பெற்றிருந்தாள். 1956 ஜனவரி 17-இல் இந்தியக் குடியரசுத் தலைவர் இந்து வாரிசுரிமைச் சட்டத்திற்கு ஒப்புதலளித்த நாள்வரை இந்நிலையே இருந்தது.

1956 ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் பல மாற்றங்களை ஏற்படுத்தியது. இச்சட்டப்படி பெண்கள் முதன்முறையாக சொத்துரிமை பெற்றனர். மகன்களைப் போல் மகளுக்கும் சொத்தில் பங்குண்டு. இச்சட்டத்தின் 14ஆம் பிரிவு பெண்களை சொத்தின் முழு உரிமையாளர்களாக்கியது. திருமணமாகாமல் வீட்டிலுள்ள பெண்ணுக்கும்

இப்பங்கு உண்டு. ஜம்மு காஷ்மீர் தவிர பிற பகுதிகளில் செல்லுபடியாகும் இச்சட்டம் இந்துக்கள், பௌத்தர், சீக்கியர், சமணர் ஆகியோருக்குப் பொருந்தும். ஆனால் மலைவாழ் மக்களுக்குப் பொருந்தாது. மதம் மாறியவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தும். 1954ஆம் ஆண்டில் சிறப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு இச்சட்டம் பொருந்தும். சொத்துப் பிரிவினை ஒருமுறை தான் மேற்கொள்ளப்படும். அடுத்து வரும் தலைமுறையினருக்கு சொத்தில் பங்கு கிடையாது. ஆனால் சொத்தைப் பெற்ற ஒரு பெண் அதைத் தன் மகன் மற்றும் மகள்களுக்குப் பிரித்தளிக்கலாம். இச்சட்டத்தின் 15 (2) (A) பிரிவின்படி இறந்தவருக்கு மகனோ, மகளோ இல்லையெனில் அச்சொத்தானது மனைவியின் தகப்பனாரின் வாரிசுகளுக்குச் சேரும். இந்துப் பெண்களின் சொத்துக்கள் அவளுடைய மகன் மற்றும் மகள்களைச் சேரும். அவளது கணவருக்கும் அச்சொத்தில் பங்கு உண்டு. பிரிவு 16 (2) இன்படி பெண்ணுக்கு முன்பே இறந்துவிட்ட மகன் அல்லது மகள் ஆகியோரின் வாரிசுகளுக்கு அப்பெண்ணின் சொத்தில் உரிமையுண்டு. அரசு, அச்சுறுத்தல்கள், நிலவுடைமையாளர் அல்லது கடன் கொடுத்தவரின் தொந்தரவு காரணமாக பெண் சொத்தை விற்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ள உரிமை உடையவர். சமயக் கடமைகளை ஆற்ற பெண் தனது சொத்தை விற்கலாம். சொத்துகளைப் பராமரிக்க வசதி, வழிவகை இல்லாத போது பெண்கள் சொத்தை விற்க உரிமையுடையவர்கள்.

### முகமதியச் சட்டம்

1937 ஆம் ஆண்டின் தனிச் செயல்பாட்டுச் சட்டப்படி, (ஷாரியாதி) சொத்துரிமை வகுக்கப்பட்டது. மனைவி, தாய், சகோதரி என்ற அடிப்படைகளில் பெண்கள் சொத்துரிமை பெறுகின்றனர். மகளின் குழந்தைகளும் பாகுபாடு இன்றி சொத்தில் பங்குபெற உரிமையுண்டு. சொத்துரிமையைப் பொறுத்தவரை “ஹனாபி சொத்துரிமைச் சட்டம்” இஸ்லாமியரால் பின்பற்றப்படுகின்றது. இஸ்லாமியப் பெண்களுக்கும்,

அவர்களுக்கு வாரிசு இல்லையென்றாலும் சொத்தில் பங்கு உண்டு. ஷீயாச் சட்டப்படி ஒரு பெண்ணுக்கு மகன் இல்லாமல் மகள் மட்டுமே இருந்தால் அவர்கள் சன்னி பிரிவில் கூறப்பட்டுள்ளதைவிட அதிக அளவு பங்கைப் பெறுவர். திருமணத்தின்போது கணவனால் மனைவிக்குத் தரப்படும் 'மஹர்' பணமானது அவளது மரியாதைக்காகத் தரப்படுவதாகும்.

**கிறித்துவச் சட்டம்**

1865, 1925 ஆகிய ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட வாரிசுச் சட்டங்கள் இந்திய கிறித்துவர்களுக்காக உருவாக்கப்பட்டவை. 1916 ஆம் ஆண்டின் திருவிதாங்கூர் கிறித்துவ வாரிசுரிமைச் சட்டத்தின் 22 (1) ஆம் பிரிவின்படி தகப்பனாரின் மரணத்திற்குப் பின் மணஉறவு காரணமாக தாயார் சொத்துக்களைத் தீர்மானிக்கும் உரிமையைப் பெறுகின்றனர். உயில் எழுதப்பட்டிருப்பின் அதன்படி நடப்பது மனைவியின் கடமையாகும். இச்சட்டத்தின் 33ஆம் பிரிவு கணவனின் மரணத்திற்குப் பின் மனைவி மேற்கொள்ள வேண்டிய சொத்துப் பிரிவினை பற்றிய செய்திகளைத் தெளிவாகத் தந்துள்ளது.

1925 ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டம் விதவைக்கு பாதி பங்கு சொத்தையே தர வகை செய்துள்ளது. இதன் 41 முதல் 47 வரையுள்ள பிரிவுகள் சொத்தின் உரிமையாளர்கள் யார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ஆனால் 1956 ஆம் ஆண்டு சட்டம் மாற்றங்களை உருவாக்கியுள்ளது.

மேலே தரப்பட்ட பல உரிமைகள் இருப்பினும் பெண்களின் நிலை மேம்படவில்லை. பெரும்பான்மையான பெண்கள் தமது சட்ட உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளாமையே அதற்குக் காரணம். பெண்களின் விழிப்புணர்வு வளர்ந்தால் அவர்களின் முன்னேற்றத்திற்கு அது அடித்தளமாக அமையும்.

- - -

Scanned by TapScanner

# 22

## பெண்களின் சமகாலப் பிரச்சனைகள்

பெண்ணுரிமை விரிவாகப் பேசப்பட்டு பல உரிமைகள் பெண்களுக்குத் தரப்பட்டுள்ளன. உரிமைகள் மூலம் பெண்களின் நிலை உயர்த்தப்பட்டாலன்றி சமுதாயம் மேம்படாது. சமுதாயத்தின் உறுப்பான பெண்கள் பலவகையான சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பல வழிகளில் துன்புறுகின்றனர்.

**பெண்கருக் கொலை** (Female Foeticide)

அமினோ சிந்தசிஸ் முறையில் கருப்பையிலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறிய முடியும். அதனால் பெண்கள் தமக்கு வேண்டாத பெண் குழந்தையைக் கருக்கலைப்பு முறையில் கொலை செய்கின்றனர். இத்தகைய கருக்கலைப்பு தாயின் உயிருக்குத் தீங்கு விளைவிக்கலாம். கருவுற்ற பெண்ணின் மனநிலை பாதிக்கப்படுகின்றது. 1971ஆம் ஆண்டில் இந்தியாவில் இயற்றப்பட்ட மருத்துவக் கருக்கலைப்புச் சட்டம் இதற்கான மாற்று வழியைத் தரவில்லை. சில விதிகளுக்கு உட்பட்டு கருக்கலைப்பைச் செய்யலாமென்று கூறப்பட்டுள்ளது. பலவிதமான கருத்தடை முயற்சிகள் பலனளிக்காமல் கருவுற்றால் 18 வயதுக்கு உட்பட்ட பெண்ணாயிருந்தால் அவளது ஒப்புதலுடன் கருவைக் கலைக்கலாம். பதிவு பெற்ற மருத்துவர் 12 வாரத்திற்கு உட்பட்ட கருவைக் கலைக்கலாம். 12 முதல் 20 வாரங்கள் ஆகிவிட்டால் அங்கீகாரம் பெற்ற இரு மருத்துவர்களால் அல்லது

Scanned by TapScanner

அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளில் கருக்கலைப்பு செய்யலாம். ஆனால் இம்முறையற்ற செயலைத் தடுப்பதற்காக 1994 ஆம் ஆண்டின் ஒழுங்குபடுத்துதல் மற்றும் தவறாகப் பயன்படுத்துதல் சட்டம் (The pre-natal Diagnostics Techniques Regulation and prevention of Misuse Act) இயற்றப்பட்டது. கருப்பையிலுள்ள பெண் குழந்தையை ஆய்வில் கண்டறிந்து கொல்வதை இச்சட்டம் தடைசெய்கின்றது. இதையும் மீறி முறையற்ற கருக்கலைப்பு செய்யும் மருத்துவருக்கு மூன்று ஆண்டு தண்டனையும் ரூ. 10,000/- அபராதமும் விதிக்கப்படலாம். அத்தவறை மீண்டும் அதே மருத்துவர் செய்வாரேயானால் அவருக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.50,000/- அபராதமும் விதிக்கப்படும். கருவிலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறியும் விளம்பரங்கள் செய்யப்பட்டால் அதைச் செய்தவர்களுக்கு மூன்றாண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும் விதிக்கப்படலாம். ஆனால் இச்செயல்கள் மறைமுகமாக நடந்தேறுகின்றன. அறிவியல் வளர்ந்து முன்னேற்றத்திற்குப் பயன்படுவதற்குப் பதில் பெண்களின் குழந்தைப் பேறு உரிமையைப் பறிப்பது பெண்ணுரிமையைப் பாதிப்பதாகும்.

**பெண் சிசுக் கொலை** (Female infanticide)

பெண் குழந்தையைப் பிறந்தவுடன் அழித்துவிடுவது பெண் சிசுக் கொலை எனப்படும். பெண் சிசுக் கொலை என்பது மனித உரிமை மீறிய மனிதாபிமானமற்ற செயலாகும். ஆயினும் இக்கொடுஞ்செயல் தமிழகத்தில் அதிக அளவில் நடக்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் 12 மில்லியன் பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்றன. பெண் சிசுக் கொலையைப் பற்றிய செய்திகள் 1986 ஆம் ஆண்டிற்குப் பின் முக்கியத்துவம் பெற்றன. இது ஒரு சமூகப் பிரச்சனை மட்டுமல்ல பெண்களின் பிரச்சனையுமாகும்.

பெண் சிசுக் கொலைக்குப் பல காரணிகள் உண்டு. ஆண் பெண் குழந்தைகளிடம் உள்ள பாலியல் வேறுபாடுகள் பெண் குழந்தைகளை வெறுக்கச் செய்கின்றன. ஆண் சம்பாதித்து குடும்பத்தைக்

காப்பாற்றுவான் என்பதும், பெண் என்பவள் வரதட்சணை, திருமணச் செலவு போன்றவற்றிற்காகப் பிறந்தவள் என்ற கருத்தும் இதற்குக் காரணம். ஆண் வாரிசுதான் குடும்பத்தின் பெயர் சொல்லும் என்ற நம்பிக்கை மற்றொரு காரணம். மக்களிடையே உள்ள பழைமைக் கோட்பாடு, பாரம்பரிய நிலைகளுக்கு முக்கியத்துவம் முதலியன பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன. அதன் பிரதிபலிப்பு பெண் சிசுக் கொலை. உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வு பெண் குழந்தைகள் மரணமே மிகுதி என்று குறிப்பிட்டுள்ளது. ஆணாதிக்கத்தின் விளைவாக பெண் குழந்தைகள் வெறுக்கப்படுகின்றனர். ஆண் குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவைவிட பெண் குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவு அதிகம் என்ற மனப்பான்மையும் பெண்குழந்தைகள் மீதான வெறுப்புக்குக் காரணமாகின்றன. பெற்றோர்களின் பொருளாதாரச் சிக்கல்கள் பெண் குழந்தைகளை வெறுக்கச் செய்கின்றன. குழந்தைப்பேற்றுக்கான செலவு, படிப்புச் செலவு, உடைச் செலவு போன்றவை பெண்களைப் பொறுத்தவரை மிகுதியாக உள்ளதால் பெண் குழந்தைகள் மீது வெறுப்பு ஏற்படுகின்றது. பெண்களின் திருமணச் செலவு மிகுதி. அவர்களுக்குச் சமமான வரனைப் பார்ப்பது கடினமாக உள்ளது. மேலும் கல்வி கற்ற பெண்களை பெரியவர்கள் வெறுக்கின்றனர். பொதுவாக பெண்கள் ஒரு சுமையாகவே பெற்றோர்களால் கருதப்படுகின்றனர். வறுமையும் ஒரு காரணமாகக் காட்டப்படுகின்றது. பெண் குழந்தைகளுக்கான செலவு மிகுதி என்பதால் பெண் குழந்தைகள் வெறுக்கப்படுகின்றனர். சாதிச் சிக்கல்களும் இதற்குக் காரணமாயுள்ளன.

பெண் சிசுக்களைக் கொல்லத் தமிழகத்தில் பல வழிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. எருக்கம் பால், கள்ளிப் பால், பூச்சி மருந்து, நெல் மணி, புகையிலைச் சாறு, செம்பாக்கை ஊறவைத்துத் தருதல் போன்ற முறைகளில் பெண் சிசுக்கள் கொல்லப்படுகின்றன. மூச்சுத் திணறலை ஏற்படுத்தியும், பசியால் வாடச் செய்தும், நீரில் மூழ்கடித்தும் கொல்லப்படுகின்றன.

## அரசின் தடுப்பு நடவடிக்கைகள்

1971 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மருத்துவ கருக்கலைப்புச் சட்டத்தால் பெண் கருக்கலைப்பைத் தடுக்க இயலவில்லை. பதிவு பெற்ற மருத்துவர்கள் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு கருச்சிதைவு செய்யலாமென்ற விதியானது பெண் சிசுக்களைக் கண்டறிந்து கொல்ல ஏதுவாகிறது.

1992-இல் தமிழக அரசு உருவாக்கிய தொட்டில் குழந்தைத் திட்டத்தின் வாயிலாக 1995 வரை 95 குழந்தைகள் தொட்டிலில் போடப்பட்டு அரசால் பாதுகாக்கப்படுகின்றன. 1992 இலிருந்து 2014 ஆம் ஆண்டு முடியவுள்ள கணக்கின்படி இத்திட்டத்தின்கீழ் 4000 க்கும் மேற்பட்ட பெண்குழந்தைகள் காக்கப்படுகின்றன. அதே ஆண்டில் (1992) "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஒன்றை தமிழக அரசு உருவாக்கியது. அதன்படி அரசு அப்பெண்கள் பெயரில் குறிப்பிட்ட தொகையை வைப்புத் தொகையாக முதலீடு செய்கின்றது. அதன்மூலம் கிடைக்கும் வட்டியை 20 வயதுக்குப் பின் ரூ.20,000/- அவர்களுக்குத் தரப்படுகின்றது. அவர்களது கல்விச் செலவை அரசே 20 வயது வரை ஏற்றுக் கொள்கின்றது.

இவற்றைப் போன்றே மத்திய அரசு உருவாக்கிய திட்டம் அரசு மருத்துவமனையில் பிறக்கும் பெண் குழந்தையின் தாய்க்கு ரூ.1000/-த்தைத் தருகின்றது. இவற்றுடன் வேறு பல வழிகளிலும் பெண் சிசுக் கொலை தடுக்கப்படலாம். அவை பின்வருவனவாகும்:

பெண் குழந்தைகளுக்கு ஆண் குழந்தைகளுக்குக் கிடைப்பதைப் போல சம உரிமை கிடைக்க வேண்டும். கிராமப்புறப் பெண்களிடம் பெண் குழந்தைகளைக் கொல்வது தவறானது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். வானொலி, தொலைக்காட்சி, சினிமா, நாடகம், சமூக ஊடகம் போன்றவற்றைப் பயன்படுத்தி பெண் சிசுக் கொலையைத் தடுக்கலாம். பெண் கல்வியை ஊக்குவித்தல், பெண்களுக்கு சுயதொழில் நடத்த வகை செய்து தருதல், இட ஒதுக்கீட்டின் மூலம் பெண்களின் ... உயர்த்துதல், வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குதல்

போன்ற வழிகளும் நடைமுறைப்படுத்தப் படலாம். சுயதொழில்கள் நடத்த சுயஉதவிக் குழுக்கள் மூலமாகவும், வங்கிக் கடன் மூலமாகவும் வகை செய்து, அவர்களது வருமானத்தைப் பெருக்கி பொருளாதாரத்தை உயர்த்த வகை செய்யலாம். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் விரிவாக்கப்பட்டு பெண் குழந்தைகள் பாதுகாக்கப்படலாம். கருவுற்ற பெண்களின் பெயர்கள் மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்டு பிரசவம் பார்க்க ஏற்பாடு செய்யலாம். முறையற்ற இறப்புகளின் மூலம் பெண் குழந்தைகள் உயிரிழந்தால் அது காவல் நிலையத்தின் நடவடிக்கைக்காகத் தெரிவிக்கப்பட வேண்டும். மைய, மாநில அரசுகள் கடுமையான சட்டங்களை இயற்றலாம். பெண்களுக்கு சொத்துரிமை பற்றிய சட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தி பெண் சிசுக்களைப் பாதுகாக்கலாம். பெண்ணுரிமையைப் பாதிக்கக்கூடிய பழைமைப் போக்கு, பத்தாம்பசலித்தனம், சமூகக் கட்டுப்பாடுகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றை முறையான மற்றும் முறைசாராக் கல்வியின் வாயிலாகத் தடுக்கலாம். சிசுவதை செய்பவர்களுக்கு இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 302, 305 மற்றும் 317 இன்படி முறையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றனவும் பயன்படுத்தப்படலாம். பெண்களுக்கான சிறப்புரிமைகளையும் முன்னுரிமைகளையும் விரிவுபடுத்தலாம்.

### குழந்தை மணம் (Child Marriage)

ஆங்கிலேயரின் ஆட்சியின் போது இந்தியாவில் குழந்தைத் திருமணத்தைத் தடுக்க வகை செய்யப்பட்டது. 1872 இல் குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. 1891 இல் உடன்படுவயதுச் சட்டம் கொண்டு வரப்பட்டு பெண்களின் திருமண வயதை 10 லிருந்து 12 ஆக உயர்த்தியது. 1901 இல் பரோடா அரசாங்கம் பெண்கள் மற்றும் ஆண்களின் திருமண வயதை முறையே 12 மற்றும் 16 ஆக தீர்மானித்தது. 1929 இல் ஹாபிலாஸ் சாரதா என்பவரால் கொண்டு வரப்பட்ட சாரதாச் சட்டம் பெண்களின் திருமண வயதை 14 என்றும்

Scanned by TapScanner

ஆண்களின் திருமண வயதை 18 என்றும் தீர்மானித்தது. இதன் பின்னர் சுதந்திர இந்தியாவில் 1955 இல் திருமணச் சட்டம் திருமணச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தது. தற்போது இச்சிக்கல் அரசால் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டுச் சட்டதிருத்தம் பெண்ணின் திருமண வயதை 18 ஆக உயர்த்தியது. 2006 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 'குழந்தைத் திருமணத் தடைச்சட்டம்' பெண்ணின் திருமண வயது 18 என்று உறுதி செய்தது.

**உடன்கட்டை ஏறுதல்** (Sati or Self immolation)

இது, கணவன் இறந்தால் அவனது மனைவி ஈமத்தீயில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் வழக்கம் ஆகும். ராஜாராம் மோகன்ராய், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். 1828 முதல் 1835 வரை இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங் 1829 இல் சதி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். உடன்கட்டை ஏறிய விதவையும், அதற்குக் காரணமாகவும், உடந்தையாகவும் இருந்தவர்களும் அச்சட்டப்படி தண்டிக்கப்பட்டனர். இருப்பினும் இக்கொடிய வழக்கம் குறைந்த அளவில் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் போன்ற இந்திய மாநிலங்களில் தற்போதும் வழக்கத்தில உள்ளது.

**தேவதாசி முறை** (Devadasi System)

இவ்வழக்கம் தீபகற்பத் தென்னிந்தியாவில் 17ஆம் நூற்றாண்டில் உருவாயிற்று. குடும்பத்தில் பெண் குழந்தைகளைப் பராமரிக்க இயலாத நிலை ஏற்பட்டாலும், கோவிலுக்கு அர்ப்பணிப்பு நோக்கிலும், 'பொட்டுக் கட்டுதல்' என்ற முறையில் பெண்கள் ஆண்டவனின் அடியார்களாக; தேவதாசிகளாக ஆக்கப்பட்டார்கள். ஆண்டவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, கலை, நாட்டியம், இசை ஆகிய நற்பணிகளில் ஈடுபட்டனர். அவர்கள் காலப்போக்கில் முறையற்ற செயல்களுக்குத் தள்ளப்பட்டனர். அவர்களுடைய பொருளாதார நிலையால் அவர்களுடைய வாழ்க்கை அலங்கோலமாயிற்று. எனவே அம்முறையானது சமூகக் கேடாக உருவெடுத்தது. 1928இல் டாக்டர் டி.பி.முத்துலெட்சுமி ரெட்டியின் பெருமுயற்சியால் சட்டப்படி இம்முறை ஒழிக்கப்பட்டது. ஆனால் கர்நாடகம்

மற்றும் மகாராஷ்டிரா போன்ற பகுதிகளில் தேவதாசி முறை வழக்கத்தில் உள்ளது. கர்நாடகத்திலுள்ள பெல்காம் மாவட்டத்தில் எல்லம்மா மற்றும் ரேணுகா போன்ற கடவுள்களுக்கு பெண்கள் அர்ப்பணிக்கப்படுகின்றனர். அவர்களுள் 75 விழுக்காட்டிற்கும் மேலானோர் தாசிகளாகவே வாழ்கின்றனர். கல்வியறிவில்லாதோர், வறுமையில் வாடுவோர், விதவைகள், கனவனால், குடும்பத்தினரால் கைவிடப்பட்டோர் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். 1988 இல் தேவதாசி அர்ப்பணிப்புத் தடைச் சட்டம் ஒன்று ஆந்திர மாநிலத்தில் இயற்றப்பட்டது. அதன்படி பெண்களை கோவில்களுக்கு பொட்டுக்கட்டிவிடும் முறை தடுக்கப்பட்டது. இன்று இம்முறையானது இந்தியாவில் மிகவும் குறைவு.

**பலதார மணம்** (Polygamy)

ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்வது பலதார மணம் எனப்படும். இது சமூக அநீதியாகும். பண்பாடு மற்றும் ஒழுக்க நெறிகளுக்குப் புறம்பானது. இக்கொடுமையை இராஜாராம் மோகன்ராய் முதன்முதலாக எதிர்த்தார். இருப்பினும் இஸ்லாமியச் சட்டம் இதை எதிர்க்கவில்லை. இந்தியாவில் 1955-ஆம் ஆண்டில் பலதார மணத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பெண்களிடம் கல்வியறிவின்மை, சட்டம் பற்றிய அறியாமை, சமூகச் சூழல்கள் போன்றவற்றால் பலதார மணம் முழுமையாக ஒழிக்கப்படவில்லை. பலதார மணத்தால் பெண்களின் நிலை தாழ்கின்றது. அவர்கள் வெறும் இயந்திரங்களாகச் செயல்பட்டு உரிமைகள் அற்றவர்களாகின்றனர். தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் பிரிவினர் ஆகியோரிடம் இம்முறை அதிக அளவில் காணப்படுகின்றது.

**பாலியல் பலாத்காரம்** (Raping)

பாலியல் பலாத்காரமென்பது பெண்ணின் கற்புக்கு தீங்கு விளைவிப்பது. பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக (வலுக்கட்டாயமாக) அவளை பாலியல் உறவில் ஈடுபடச் செய்வதாகும். மிரட்டல்கள், அச்சுறுத்தல் மூலம் அதிகார வரம்பு காரணமாக, பணிப் பெண்கள் மற்றும் கீழ்நிலைப் பிரிவினர் பாலியல் வன்கொடுமைக்கு

உட்படுத்தப்படுகின்றனர். டெல்லியில் 2000-ஆம் ஆண்டில் பாலியல் பலாத்காரம் 426 ஆக இருந்தது. 2017ஆம் ஆண்டு இது இரண்டாயிரத்தைவிட கூடுதலானது. இக்குற்றமானது சர்வதேச அளவில் பெருகியுள்ளது. பெண் குழந்தைகள் பல வழிகளில் பலாத்காரமாகப் பாலியலில் ஈடுபடுத்தப்பட்டு துன்புறுத்தப்படுகின்றனர். பெண்களைக் கேலி செய்தல், கற்பழித்தல் ஆகியனவும் பாலியல் பலாத்காரத்துடன் தொடர்புடையவை. கால மாற்றம் காரணமாகவும் பெண்ணுரிமை கோரி பெண்கள் சமஉரிமையைப் பெற விழைகையில் பாலியல் சிக்கல்கள் கூடுகின்றன.

இந்திய குற்றவியல் சட்டப்பிரிவுகள் 366 (A), 376 ஆகியவை பாலியல் வன்கொடுமையைப் பற்றி விளக்குகின்றன. இக்குற்றங்கள் நிரூபிக்கப்பட்டால் ஆயுள்தண்டனை அல்லது நீண்டகால சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படலாம். பாலியல் கொடுமை பெருகுவதால் 1993 இல் நடைபெற்ற பன்னாட்டுத் தொழிலாளர் கருத்தரங்கில், பாலியல் பலாத்காரமென்பது பெண்களைப் பாடுபடுத்துவதாகும் என்று ஏற்கப்பட்டது. 1995-ஆம் ஆண்டின் பீஜிங் பிரகடனமும் ஐக்கிய நாட்டவையின் கோட்பாடுகளும் 'பெண்களின் மதிப்பையும் உரிமையையும் பாதுகாக்க வேண்டியது அந்தந்த நாட்டு அரசுகளின் கடமை' என்று கூறுகின்றன.

**இந்திய உச்சநீதிமன்ற வழிகாட்டல்கள்**

பாலியல் பலாத்காரத்துக்கு இலக்கான பெண்களுக்கு உதவும் நோக்கில் இவை அமைந்துள்ளன. இது 13, ஆகஸ்டு 1997-இல் இந்திய உச்சநீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. இவை இந்திய அரசியலமைப்பின் 14, 15, 19(i), (g), 21, 42, 51 (A) ஆகிய பிரிவுகளின் பின்னணியில் உருவாக்கப்பட்டவை.

பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக புகார் கூறுபவர்கள் சட்டப்படியான உதவிகளைப் பெறவேண்டும். அவர் சார்பில் உள்ள வழக்கறிஞர் வழக்கு, காவல்துறை, நீதிமன்றம், மருத்துவ உதவி போன்ற

பல உதவிகளைத் த ஃ கட்சிக்காரருக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். வழக்கு முடியும் வரை அவர் ச ர்பில் வாதிடுபவர் பலவித உதவிகளைப் பெற்றுத் தரவேண்டும்.

பாதிக்கப்பட்டவரின் மனநிலை குழப்பமாய் இருக்கும். ஆகவே, விசாரணையின்போது வழிகாட்ட காவல் நிலையத்திலேயே சட்ட உதவி வழங்கப்பட வேண்டும். இது பாதிக்கப்பட்ட பெண்ணின் உரிமையாகும். காவல் துறையும் வழக்கறிஞர் ஒருவரின் உதவியை நாடுமாறு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டவருக்கு அறிவுரை வழங்க வேண்டும். ஒவ்வொரு காலகட்டத்திலும் காவல் துறையினர் மேற்கொண்ட செயல்களை அறிக்கையாகத் தரவேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வழக்கறிஞர் இல்லாத நிலையில் ஒரு வழக்கறிஞரைத் தேர்ந்தெடுத்து உதவி கோர காவல் நிலையத்தில் இதற்காகவே வைக்கப்பட்டிருக்கும் பட்டியலைத் தந்து உதவவேண்டும். காவல்துறையினர் நீதிமன்றத்தில் விண்ணப்பித்து வழக்கறிஞரை நியமிக்கலாம். இதன்மூலம் விசாரணை தாமதமாவதைத் தடுக்கலாம். குறிப்பாக பாலியல் பலாத்கார வழக்கில் பாதிக்கப்பட்டவர் யாரென்பது வெளிப்படையாகத் தெரியக்கூடாது. அரசியலமைப்புச் சட்டம் 38 (1) ஆம் பிரிவின்படி குற்றவியல் இழப்பீடு தரப்பட வேண்டும். வழக்கை விசாரித்த நீதிமன்றமே பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க வகை செய்கையில் பாதிக்கப்பட்டவரின் அதிர்ச்சி, மன உளைச்சல், கருவுற்றிருந்தால் மகப்பேறுச் செலவு, பொருளாதார மற்றும் சமூக அந்தஸ்தில் அப்பெண்ணின் நிலை ஆகியவற்றை மனத்திற்கொண்டு இழப்பீடு தீர்மானிக்கப்படவேண்டும். பெண்களின் அந்தஸ்து கெடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்தியாவில் பலவிதமான தொழிற்கூடங்களில் பணியாற்றும் பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் தொடர்பான குற்றங்கள் குறையவில்லை. தொழில் நிறுவனங்களின் நிர்வாகம் இதுபோன்ற குற்றங்களைத் தடுப்பதற்கான வழிகளை மேற்கொள்ள வேண்டும்.

பாலியல் தொடர்புக்கு விருப்பமில்லாத ஒரு பெண்ணைத் திட்டமிட்டு வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ பேச்சினாலோ செயல்களாலோ சீண்டுதல், கேலி செய்தல் போன்றவை பாலியல்

துன்புறுத்தல்கள் என்று உச்சநீதிமன்றம் கூறுகின்றது. அரசு அல்லது தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர், மதிப்பூதியம் அல்லது தொகுப்பூதியம் பெறுவோர், தன்னார்வத் தொண்டாற்றுவோர் மற்றும் முறைசாராத் தொழிலில் ஈடுபடுவோர் என்ற பலவகைத் தொழில்புரியும் பெண்களுக்கும் இக்கூற்று பொருந்தக் கூடியதே. பணியிலுள்ள பெண்களுக்கு பாலியல் சிக்கல்களிலிருந்து பாதுகாப்புத் தரவேண்டும். உச்சநீதிமன்றம் வழங்கும் தீர்ப்பைச் செயல்படுத்துவது பெண்களை பணியிலமர்த்தும் நிறுவனங்களின் கடமையாகும்.

**பாலியல் பலாத்காரத்தை எவ்வாறு தடுப்பது?**

பாலியல் வன்முறை, சட்டப்படி குற்றமாகையால் அது பணியாற்றுமிடங்களில் தடுக்கப்படவேண்டியது என்பதைப் பலரும் உணரச் செய்தல் வேண்டும். நிறுவனங்களின் நடத்தை விதிகளில் பாலியல் குற்றங்களைப் பற்றிய விதிமுறைகளும் சேர்க்கப்பட வேண்டும். 1945ஆம் ஆண்டின் தொழிற்சாலை விதிகளின்படி பாலியல் துன்புறுத்தல் குற்றமாகக் குறிப்பிடப்பட்டு அதற்கான தண்டனையும் கூறப்பட வேண்டும். பெண் தொழிலாளர்களின் பலதரப்பட்ட பாதுகாப்புகளுக்கும் வகை செய்யப்பட்டு பெண் தொழிலாளர்களிடையே தன்னம்பிக்கையை ஊட்ட வேண்டும். பெண் தொழிலாளர்கள் தமது உரிமைகள் மற்றும் கடமைகளைப் பற்றி உணர்ந்திருத்தல் வேண்டும். நிறுவன அமைப்பும், நீதிமன்றங்களும் அவர்களுக்குப் பாதுகாப்புத் தர ஆயத்தமாய் இருக்க வேண்டும். மைய, மாநில அரசுகள் இதைக் களையத் தக்க சட்டங்களை இயற்ற வேண்டியது இன்றியமையாததாகும். தடுப்பு வழிகளானவை 1993-ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்திற்கு உட்பட்டதாயிருத்தலும் முக்கியமானதாகும்.

**பெண்களைக் கேலி செய்தல்**

பெண்களைத் தவறான நோக்கங்களுடன் கேலி செய்து மனத்தை நோகச் செய்வது முறையற்ற செயலாகும். பணியிடங்கள், பள்ளிகள், கல்லூரிகளுக்குச் செல்லும் பெண்களை பேருந்துகளிலோ அல்லது நடந்து செல்லும் போதோ, பெண்களுக்கு மன உளைச்சல்

ஏற்படும் வகையில் பேசுதல், கேலி செய்தல் ஒரு அநாகரிகச் செயல். இத்தகைய முறைகேடுகளைக் களைய தமிழக அரசு 1998-ஆம் ஆண்டில் ஒரு சட்டத்தை இயற்றியது. 2002-ஆம் ஆண்டில் அது திருத்தப்பட்டது. பொது இடங்களில் பெண்களைக் கேலி செய்வோருக்கும் அதற்குத் துணை நிற்பவர்களுக்கும் மூன்றாண்டு சிறைத்தண்டனை அல்லது ரூ.10,000 வரை அபராதம் விதிக்கப்படும் எனப்பட்டது. கேலி செய்ததால் உடலில் இரத்தக் காயங்கள் ஏற்படுமேயாயின், அல்லது மரணம் ஏற்பட்டால் ஆயுள் தண்டனையும், ரூ.50,000/- அபராதமும் விதிக்கப்படும். கேலி செய்ததால் ஏற்பட்ட அவமானத்தால் தற்கொலை செய்து கொண்டால் அதற்குக் காரணமானவருக்கு மேலே கூறப்பட்ட தண்டனை வழங்கப்படும். இவற்றிற்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது ரூ. 50,000/- வரை அபராதமோ விதிக்கப்படும். பொது இடங்களில் அதாவது கல்விக் கூடங்கள், வழிபடும் இடங்கள் போன்ற இடங்களில் பெண்கள் கேலி பேசப்படுவதைத் தடுக்க அவற்றின் உடமையாளர் அல்லது உரிமையாளர் அல்லது நடத்துநர்கள் தாமே முன்வரவேண்டும். காவல்துறையின் துணையையும் நாடலாம். அவ்வாறு காவல்துறைக்கு தகவல் தர மறுத்தால் அவர்களும் தண்டனைக்குரியவராவர். பெண்கள் மற்றும் பெண்களின் உரிமைகளின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்காக அவர்கள் கேலி செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும்.

**வரதட்சணைக் கொடுமை**

பெண்களின் மணவாழ்க்கைக்காக வரதட்சணை தரப்படுகின்றது. பெண்களின் பெண்களுக்கு சொத்துரிமை இல்லாத காலத்தில் பெண்களின் நல்வாழ்வுக்காகவும், அவர்களுடைய மகிழ்ச்சிக்காகவும் உதவி என்ற பெயரில் மணமகனின் பெற்றோர் வரதட்சணையை வாங்கினர். ஆதலால் பெண்ணைப் பெற்றோர் பெரிதும் துன்புற்றனர். அதனால் அப்பெண்ணின் மனம் பெரிதும் துயரமடைந்தது. வரதட்சணை கொண்டுவராத பெண்கள் கணவராலும் புகுந்தவீட்டுக் குடும்பத்தாராலும்

துன்புறுத்தப்பட்டார்கள். இக்கொடுமைக்கு ஆளான பெண்கள் பலர் தற்கொலை செய்து கொண்டார்கள். சிலர் தீ வைத்துக் கொல்லப்பட்டார்கள். வரதட்சணையானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தரப்பட்டது. திருமணத்தின்போது தரப்படும் அணிகலன்கள், அளிக்கப்படும் பிற பொருட்கள், வரும் பரிசுப் பொருட்கள் ஆகியன பெண்ணின் உடைமைப் பொருளாகும்.

பொருளாதாரக் காரணங்களால் பெற்றோர்கள் வரதட்சணை தரவில்லையெனில் பெண்களுக்கு திருமணமே நடப்பதில்லை. புகுந்த வீட்டாரின் அவச் சொற்கள், கொடுமைகள் ஆகியவற்றிற்கு வரதட்சணை கொண்டுசெல்லாத பெண்கள் ஆளாகின்றனர். சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர் இக்கொடுமைக்கு ஆளாகின்றனர். எனவே இது பெண்களின் உரிமையைப் பாதிக்கும் சமூகக் கேடாகும். கல்வி கற்றவர்களும், பொருள் வசதி உடையவர்களும் இக்கொடுமைக்கு ஆளாகின்றனர். இக்கொடுமை தொடர்ந்து கூடிக் கொண்டே இருக்கிறது. இதைத் தடுக்க இந்திய மைய அரசு 1961-இல் வரதட்சணை ஒழிப்புச் சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் 1984, 1986 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டது. வரதட்சணை வாங்குவோரும், கொடுப்போரும், அதற்கு உடந்தையாக இருப்போரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அத்தகையோருக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை அல்லது ரூ. 15,000/- அபராதம் விதிக்கப்படலாம்.

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 304-B யின்படி திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் பெண் வரதட்சணைக் கொடுமையால் இறந்தால் அதற்குக் காரணமானவர்களுக்கு ஏழாண்டு சிறைத்தண்டனை வழங்கப்படும். வரதட்சணை பெறப்பட்டிருப்பின் அவற்றைத் திரும்பத் தரவேண்டும். மேலும் படித்துப் பணிபுரியும் ஆண்களுக்குக் கொடுக்கப்படும் வரதட்சணை கூடிக்கொண்டே இருப்பதால், வரதட்சணைச் சாவுகளும் கூடிக்கொண்டே இருக்கின்றன. தமிழகத்தில் வரதட்சணைக் கொடுமையால் ஆன இறப்பு எண்ணிக்கை 1996 முதல் 2000 வரை [illegible] இருப்பதைக் கீழ்க்காணும் அட்டவணையில் காணலாம்.

| ஆண்டு | இறப்பு |
|---|---|
| 1996 | 536 |
| 1997 | 606 |
| 1998 | 649 |
| 1999 | 860 |
| 2000 | 904 |

தமிழகத்தில் 2012ல் 110 வரதட்சணை சாவுகள், 1965 குடும்ப வன்முறை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2012க்கான தேசிய குற்றப் பதிவு அமைப்பின் தகவல்படி, இந்தியாவில் 8233 வரதட்சணை சாவுகள் நடந்திருக்கின்றன. சராசரியாக ஒரு மணி நேரத்துக்கு ஒரு பெண், வரதட்சணை காரணமாக மரணமடைகிறாள். ஆனால், பதிவு செய்யப்படும் வழக்குகளில் 32 குற்றவாளிகளே தண்டனை பெறுகின்றனர். குடும்ப வன்முறையின் ஒரு முக்கியமான அடிப்படை வரதட்சணை. 2012ல் 1,06,527 குடும்ப வன்முறை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது ஒரு நாளைக்கு 292 அல்லது ஒரு மணி நேரத்துக்கு 12 அல்லது 5 நிமிடத்துக்கு ஒரு பெண் கொடுமைப்படுத்தப்படுகிறாள். குடும்ப வன்முறை வழக்குகளில் 15 சதவீதம் பேரே தண்டனை பெறுகின்றனர்.

**மகளிர் காவல் நிலையங்கள்**

தமிழ்நாட்டில் இது போன்ற வரதட்சணைக் குற்றங்களைத் தடுக்கவும், பெண்களுக்கு எதிரான பல்வேறு நடவடிக்கைகளைக் குறைக்கவும் மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்காவல் நிலையங்களில் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் போன்ற பணிகளில் பெண்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**வரதட்சணை கொடுமை தடுப்புச் சட்டம்**

வரதட்சணை கொடுமை தடுப்புச் சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதை தவிர்க்க, போதிய சான்று இல்லாமல் இந்தச் சட்டத்தின்கீழ் யாரையும் கைது செய்யக் கூடாது என்று இந்திய

உச்சநீதிமன்றம் 3 ஜூலை 2014 அன்று உத்தரவிட்டுள்ளது. இந்தச் சட்டம் பழிவாங்கும் நோக்கில் சில நேரங்களில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்று எழுந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே இந்தத் தீர்ப்பு வந்துள்ளது.

வரதட்சணையைப் பற்றி எப்போது வேண்டுமாயினும் முறையிடலாம். பாதிக்கப்பட்வர், அவரது பெற்றோர், உறவினர் அல்லது வரதட்சணை எதிர்ப்பு நிறுவனங்கள் மூலம் முறையிடலாம். வரதட்சணைச் சட்டப்படி வரதட்சணைக்குக் காரணமானவர் நீதிபதியின் ஒப்புதல் பெற்று கைது செய்யப்படலாம். அக்குற்றத்தைச் செய்தவரை பிணையம் பெற்றுக் கொண்டு வெளியே விடமுடியாது. இதில் சமரசப் பேச்சுக்கு இடமில்லை.

இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கடமைகள் பகுதி 51A(R) குறிப்பிட்டபடி பெண்களின் மதிப்பைக் குறைக்கும் முயற்சிகளைத் தடுக்க வேண்டியது இந்தியக் குடிமகனின் கடமை. ஊடகங்களின் வாயிலாக வரதட்சணையின் கொடுமை, சிக்கல்கள் ஆகியன மக்களுக்கு விளக்கப்பட வேண்டும். பெண்களுக்குக் கல்வியறிவையும், தன்னம்பிக்கையையும் ஊட்டி முன்னேற்றலாம். குழந்தை மணம் தடுக்கப்பட வேண்டும். குற்றத்தின் தன்மை, கடுமை ஆகியவற்றை மனத்திற்கொண்டு நீதி வழங்கப்பட வேண்டும். வரதட்சணை பற்றிய வழக்குகளை சீக்கிரம் முடித்துத் தரக் கூடிய வகையில் இதற்கென தனி நீதிமன்றங்களை உருவாக்கலாம். வரதட்சணை எதிர்ப்புச் சட்டங்கள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆணாதிக்கம் தடுக்கப்பட்டு பெண்ணுக்குச் சமஉரிமை தரப்பட்டால் வரதட்சணைக் கொடுமை குறையும். சொத்துரிமை தரப்பட வேண்டும். வரதட்சணை வாங்காத, கலப்பு மணம், சுயமரியாதைத் திருமணம் போன்றவை ஊக்குவிக்கப்பட வேண்டும். ஆடம்பரமற்ற திருமணங்கள் முக்கியத்துவம் பெறவேண்டும். வரதட்சணைக் கொடுமையைத் தடுக்கவேண்டுமென்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை. எனவே வரதட்சணையை அனைவரும் எதிர்க்க வேண்டும்.

Scanned by TapScanner

## விதவைகள்

ஒரு பெண் தனது கணவனை இழந்தால், அவளை கைம்பெண், விதவை என்று கூறி இந்தச் சமூகத்தால் ஒதுக்கி வைக்கப்படுகிறாள். உரிமைகளற்று, வசதியற்ற தனிமை வாழ்வில் விதவைகள் துயரமடைந்தார்கள். பின்னர் வடமொழியில் 'சதி' என்று சொல்லப்படும் 'உடன்கட்டை ஏறுதல்' என்னும் கொடுமை அவர்களுக்கு இழைக்கப்பட்டது. விதவைகள் தாங்கள் மறுமணம் செய்வதற்கு ஒப்புக்கொண்டாலும், சமூகம் அதை ஏற்க மறுத்ததால் பல துன்பங்களுக்கு விதவைகள் ஆளானார்கள். ஆனால் காலப்போக்கில் பெண்கள் விதவைகளானாலும் கல்வி வளர்ச்சியால் வேலைவாய்ப்பைப் பெற்று மனநிறைவு பெறுகின்றனர். இருப்பினும் சில வசதியற்ற பெண்களின் நிலை இரங்கத்தக்கதாகவே உள்ளது.

## விபச்சாரம்

தொன்றுதொட்டு பல்வேறு காரணங்களால் 'பரத்தமை' என்னும் விபச்சாரம் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையாகும். வறுமை, ஆதரவின்மை, வேலைவாய்ப்பின்மை, ஆணாதிக்கம், தொழில் செய்யும் இடங்களில் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் ஆகியவை இதன் அடிப்படைக் காரணங்களாகும். உடல் தன்மையாலும், சிலர் விருப்பத்துடன் இத்தொழிலில் மறைமுகமாக ஈடுபடுகின்றனர். விதவை மறுமணம் மறுக்கப்படல் இதற்கொரு காரணம். செல்வந்தர்களின் தன்மைகளும் இச்சூழலை ஏற்படுத்துகின்றன. பாலியல் தொழிலைச் செய்வது கண்டறியப்பட்டால் சிறைத்தண்டனை, அபராதம் ஆகியன விதிக்கப்படும். முறையற்ற நடைமுறை ஒழிப்புச் சட்டம் (Immoral Traffic Act) 1956, 1986 ஆகிய ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இருப்பினும் நிலையான பலன்கள் கிட்டவில்லை.

## தனித்து வாழும் பெண்கள்

மணமுறிவு, ஏழ்மை மற்றும் வரதட்சணைக் கொடுமைகளால் திருமணம் நடக்காதிருத்தல், விதவைத் தன்மை, கணவனால் கைவிடப்படுதல், பெற்றோரை இழந்த இளவயதுப் பெண்கள், சண்டை,

சந்தேகத்தால் மணமுறிவு ஏற்படுதல் ஆகிய காரணங்களால் பெண்கள் தனியாக வாழ்கின்றனர்.

**பெண்களின் பிரச்சனை தீர வழிகள்**

1975-ஆம் ஆண்டிலிருந்து 1985-ஆம் ஆண்டு வரை 'பெண்கள் பத்தாண்டு' எனப்படும். 1975 ஆம் ஆண்டின் மெக்ஸிகோ மாநாடு பெண்கள் சமத்துவம், வளர்ச்சி ஆகியவற்றை எட்ட வேண்டும் என்றது. ஊடகங்களின் வாயிலாக பெண்களின் உண்மை நிலை சித்தரிக்கப்பட வேண்டும், பெண்களுக்கான 33% இட ஒதுக்கீடு செயல்படுத்தப்பட வேண்டும். சமூகத்தில் பெண்கள் முறையற்ற வழிகளில் சித்தரிக்கப்படும்போது அவர்கள் நிலை தாழ்கின்றது. எனவே அதைத் தடுக்க வேண்டும். 1926ஆம் ஆண்டில் நடந்த அகில இந்திய பெண்கள் மாநாடு, 1925-இல் உருவான தேசியக்குழு, 1979-இல் ஏற்பட்ட மனுஷி அதே ஆண்டில் எழுந்த கார்மிகா, 1954-ல் உருவாக்கப்பட்ட இந்திய தேசிய பெண்கள் கூட்டமைப்பு போன்றவற்றின் செயல்களும் முறைபடுத்தப்பட வேண்டும். 1984-இல் உருவாக்கப்பட்ட குடும்ப நீதிமன்றச் சட்டம் 1988-இல் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டது.

பெண்களுக்கான கல்வி, உரிமைகள், சட்டப் பாதுகாப்பு போன்றவை வழக்கிலுள்ளன. அதேநேரம் சமூகத்தின் நடைமுறை பழைமைத் தன்மை, வழக்காறுகள், பாரம்பரியம் போன்ற தடைகள் இடர்களாக உள்ளன. பெண்ணுரிமை வளர்ந்து கொண்டிருக்கிறது. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குப் பின் பெண்களின் நிலை, முந்தைய நூற்றாண்டுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் வளர்ச்சியுற்றதாகவே உள்ளது. பெண்களிடம் தன்னம்பிக்கை, சுயச் சார்பு போன்றவை பெருகியுள்ளன. பெண்களின் முன்னேற்றத்தால் நாடு முன்னேறியுள்ளது.

- - -

# 23

## அகதிகளின் உரிமைகள்

## (The Rights of the Refugees)

ஒரு நாட்டில் வாழ்பவர்கள் போர்கள், இனக்கலவரம், அரசியல் சூழல்கள், பொருளாதாரச் சிக்கல்கள் போன்றவற்றால் சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டு பிற நாடுகளில் தஞ்சம் அடைந்தால் அவர்கள் அகதிகள் எனப்படுவர். அவர்கள் தம்முடைய வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தஞ்சமடைகின்றனர். அவர்கள் வீடும் நாடுமற்ற அநாதைகள். அவர்களுக்கெனத் தனிப்பட்ட பன்னாட்டுச் சட்டங்கள் இல்லை. அகதிகள் பன்னாட்டு உடன்படிக்கைகளுக்குக் கட்டுப்பட்டவர்கள். போர்கள், இனப்படுகொலை போன்ற காரணங்களால் அகதிகளின் எண்ணிக்கை கூடியுள்ளது. அகதிகள் சொந்த நாட்டில் உரிமையற்றவர்கள். புதிய நாட்டிலும் அவர்களுக்கு குடியுரிமை கிடையாது. அயல்நாட்டில் ஆதரவற்றவர்களாய் கல்வி, உணவு, இருப்பிடம், சுகாதாரட் போன்ற வசதிகளற்றவர்களாய் வாழ்பவர்கள். அகதிகளின் எதிர்காலத்தைக் கணிப்பது அரிது.

### ஐக்கிய நாட்டவையும் அகதிகளின் உரிமையும்

ஐ.நா. அவை உலக மக்களின் உரிமைகளை பன்னாட்டளவில் விரிவுபடுத்தியது. ஐக்கிய நாட்டவையின் சாசனமே அகதிகளைப் பற்றிய செய்திகளைக் கொண்டுள்ளது. 1948இல் வெளியிடப்பட்ட பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனம் மனிதர்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் ... அவர்களுக்கு உரிமையுண்டு என்று சுட்டிக்காட்டியது.

Scanned by TapScanner

அப்பிரகடனத்தின் 14 ஆம் பிரிவு பலதரப்பட்ட கொடுமைகள், சித்ரவதை போன்ற இடர்களிலிருந்து தம்மைக் காத்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்பதைக் குறிப்பிடுகின்றது. மனித உரிமைச் சட்டங்கள் இருப்பதாலும், மனிதத் தன்மை, மனிதாபிமானம் போன்றவை நம் பண்பு என்பதாலும் தம் நாட்டில் புகலிடம் தேடியுள்ள அகதிகளுக்கு, தேவையான வசதிகளைச் செய்துதர வேண்டியது அந்நாட்டு அரசின் கடமையாகும். உள்நாட்டு மக்கள், அந்நிய நாட்டு அகதிகள் தம்முடைய வசதிகளுக்குப் பல வழிகளில் இடையூறாக இருப்பதாகக் கருதுகின்றனர். வளர்ந்த நாடுகளிலிருந்து வளரும் நாடுகளுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்தால் வளரும் நாடுகளின் வளர்ச்சியும் முன்னேற்றமும் பாதிக்கப்படும். எனவே வளரும் நாடுகள் அகதிகளை வெறுக்கின்றன. எனவே நாடுகளின் கடமைகளென அகதிகளின் உரிமைகளைச் சுட்டிக் காட்டியுள்ளது.

பன்னாட்டளவிலான அகதிகளின் சிக்கல்களைக் களைய, 1951இல் ஐக்கிய நாட்டவையின் அகதிகள் உயர் ஆணையம் உருவாக்கப்பட்டது. 1951ஆம் ஆண்டிலேயே அவ்வாணையம் அகதிகளைக் காக்க ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. தொடர்ந்து அகதிகளின் பாதுகாப்புக்காக மற்றொரு ஒப்பந்தம் 1967இல் செய்து கொள்ளப்பட்டது. பன்னாட்டளவில் அகதிகளின் உரிமைகளைப் பற்றிய உடன்படிக்கைகளை மேற்கொள்கின்றது. அகதிகளின் நிலையை உயர்த்துமாறு அந்தந்த நாடுகளின் தன்மைகளைச் சாதகமாக ஆக்குகின்றது. தனது நாட்டிலுள்ள அகதிகளின் வாழ்க்கை மேம்பாட்டிற்காக அந்த நாடு தக்க முயற்சிகளை எடுக்கிறது. தனிப்பட்ட, முறைசாராத, அரசு சாராத அமைப்புகளின் துணையுடன் அகதிகளின் பிரச்சனைகளுக்கு முடிவு காண வகை செய்கின்றது. அகதிகள் தாயகம் திரும்பவும், உள்நாட்டிலுள்ள சமுதாயத்துடன் ஒத்துப் போகவும் வகை செய்து அகதிகளின் மறுவாழ்வுக்கான வழிகளை மேற்கொள்கின்றது. அகதிகளின் எண்ணிக்கை அவர்களது நிலை ஆகியன பற்றிய பல செய்திகளைப் பெற்று அதற்கான வழிகளை மேற்கொள்கின்றது. பல நாடுகளின் அரசுகளுடன் தொடர்பு கொண்டு அகதிகளுக்குப் பல

உதவிகளைச் செய்கின்றது. 1995-ஆம் ஆண்டில் உலகளவில் 20 மில்லியன் அகதிகள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டது. 2017ஆம் ஆண்டுக் கணக்கின்படி உலகளாவிய அகதிகளின் எண்ணிக்கை, 68.5 மில்லியன் ஆகும். ஐக்கிய நாட்டவையின் பொதுச் சபையின் பணிகளால் அகதிகளின் நலன்கள் பேணப்படுகின்றன. சில நாடுகளில் அகதிகள் காவலில் வைக்கப்பட்டுத் தொல்லைகளுக்கு ஆளாகும்போது அகதிகளின் உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. உயர் ஆணையத்தின் விதிகளுக்கு மாறாக யாரையும் கைது செய்யக்கூடாது. அகதிகளைத் தாய்நாட்டிற்கு அனுப்புவதில் ஐ.நா.அவை பல உதவிகளைச் செய்கின்றது.

அகதிகள் அரசியல் கலப்பற்ற அமைப்புகளை உருவாக்கலாம். அதேநேரம் புகலிடம் பெற்றுள்ள நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும். அகதிகளுக்குத் தேவையான கல்வியைத் தருவதும் அந்தந்த நாடுகளின் கடமையாகும்.

**இந்தியாவும் அகதிகளும்**

பஞ்சசீலக் கொள்கையைத் தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையாகக் கொண்ட இந்தியத் துணைக் கண்டம் பல அகதிகளின் பிரச்சனைகளைக் கண்டுள்ளது. இலங்கை, மியான்மர், ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், ஈரான், ஈராக் போன்ற நாடுகளிலிருந்து சுமார் இரண்டு இலட்சம் அகதிகள் வந்துள்ளனர். இந்தியா அவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துகின்றது. கி.பி. 2010 ன்படி இந்தியாவிலுள்ள பல நாட்டு அகதிகளின் எண்ணிக்கை கீழ்க்கண்டவாறுள்ளது.

| அகதிகளின் சொந்த நாடு | எண்ணிக்கை |
|---|---|
| | 97,000 |
| இலங்கை | 1,09,000 |
| திபெத் | 1,24,000 |
| பிறநாடுகள் | |
| மொத்தம் | 3,30,000 |

அகதிகளுக்கான ஐக்கிய நாட்டு ஹைகமிஷனின்படி 2011 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்த அகதிகளின் எண்ணிக்கை 1,84,821 ஆகும். 31.12.2014 ஆம் தேதிய கணக்குப்படி, இந்தியாவில் இருக்கும் சட்டப்பூர்வமான அகதிகளின் எண்ணிக்கை 2,89,394 ஆகும். இவர்கள் 28 வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் அகதிகளுக்கெனத் தனிப்பட்ட முகாம்கள் இயங்குகின்றன அகதிகள் தாய்நாடுகளுக்குச் செல்வதற்கான பல வசதிகளை இந்திய அரசு செய்து கொடுக்கிறது. அகதிகளை மனநிறைவுடன் அவர்களது நாடுகளுக்கு அனுப்புவது முக்கியக் கடமையாக உள்ளது.

**அகதிகளின் பொது நிலை**

இன்று உலகம் முழுவதிலும் சுமார் ஏழு கோடி அகதிகள் உள்ளார்கள். பல நாடுகளில் உள்ள சமூக, அரசியல் சிக்கல்களால் அகதிகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது. ஆப்பிரிக்காவின் சோமாலியாவிலிருந்து நான்கு இலட்சம் அகதிகள் எதியோப்பியாவுக்குச் சென்றனர். செர்பியாவுக்கும் குரோஷியாவுக்குமிடையிலான போரின் விளைவால் 40 இலட்சம் அகதிகள் உருவாயினர். சுமார் 2,70,000 மியான்மர் முஸ்லீம்கள் பங்களாதேஷில் (வங்க நாட்டில்) புகலிடம் பெற்றனர். இவ்வாறு பலவாறு அகதிகளின் எண்ணிக்கை பெருகுவதால் ஏற்படும் சிக்கல்கள் மனிதாபிமானத்திற்குப் பெரிதும் சுமையாக உள்ளன. நாடுகளின் பொறுப்புகளும் கடமைகளும் மிகுந்துள்ளன.

- - -

Scanned by TapScanner

# 24

## மனித உரிமைகள் பாதுகாப்பும் அரசு சாரா அமைப்புகளும்

மனித உரிமைகள் இன்று மனித இனம் பெற்றுள்ள பெருமையால் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றைப் பேணிப் பாதுகாத்து மனித இனத்தை வாழச் செய்வது அரசின் பொறுப்பு மட்டுமல்ல; அரசு சாரா நிறுவனங்களின் பங்கும் உண்டு. மனித உரிமைப் பண்புகளுக்கு சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினரும் உரிமை கொண்டாடலாம். சமுதாயத்தின் ஒருமித்த வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றிற்கு அடிப்படையாக உள்ளவை மனித உரிமைகள். சமூக விலங்கான மனிதன் முழு உரிமைகளையும் உடையவன். மனித உரிமைகள் பல காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆதிக்கப் பிரிவினரின் அதிகார வரம்புகள் உரிமைகளின் தடைக் கற்களாகும். குடியேற்றக் கோட்பாடுகளால் பல நாடுகள் ஆதிக்க வல்லரசுகளின் குடியேற்றங்களுக்கு உட்பட்டபோது அவற்றின் பொருளாதார நலன்களும் உரிமைகளும் பாதிக்கப்பட்டன. ஒரு சமுதாயத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், சமுதாய மாற்றம், வறுமை, கல்வியறிவின்மை, மாறுபட்ட சட்டநடிவடிக்கைகள், காவல் துறையின் அத்துமீறிய செயல்கள், தொழிலாளர் சிக்கல்கள் போன்றவை உரிமை மீறக் காரணங்களாகும். உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள், அரசுகள் ஆகியவற்றைவிட அரசு சாரா நிறுவனங்களும் அமைப்புகளும் மனித உரிமைகளைப்

பாதுகாப்பதில் பெரும் பங்காற்றுகின்றன. அவற்றைப்பற்றி அறிந்து கொள்ளல் இன்றியமையாததாகும். 1968ஆம் ஆண்டில் கூடிய முதலாம் மனித உரிமைகள் மாநாடு முறைசாரா நிறுவனங்களுக்கு முக்கியத்துவமும் பிரதிநிதித்துவமும் தரவில்லை. ஆனால் அப்போது உருவாக்கப்பட்ட மனித ஆயுக்தா (லோக் ஆயுக்தா) குழுவின் செயல் கூட்டம் 1991 செப்டம்பரில் நடைபெற்றது. அதில் முறைசாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஓரளவு இடம்பெற்றார்கள். மனித உரிமையின் ஆதரவான 30 பன்னாட்டு அரசு முறைசாரா அமைப்புகளுக்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் உரிமையளிக்கப்பட வேண்டுமெனக் கூறின. 1993 ஜூன் மாதத்தில் பன்னாட்டு மனித உரிமை நடவடிக்கைகளில் அரசு சாரா நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இந்நிலையில் பல்வேறு அமைப்புகளின் தன்மைகளைக் காணலாம்.

**சர்வதேச (பன்னாட்டு) பொது மன்னிப்பு நிறுவனம்**
(Amnesty International)

இவ்வுலகளாவிய அரசு சாரா நிறுவனம் மனித உரிமைகளைப் பேணிக் காப்பதில் மிகுதியான கவனத்தைச் செலுத்துகின்றது. அரசியல் கைதிகளின் உரிமைகள் மனிதாபிமான முறையில் பாதுகாக்கப்படுதல், அவர்கள் மீதான விசாரணைகளை விரைவு படுத்துதல், கைதிகளை முறையற்ற வகையில் சித்ரவதை செய்து கொடுமைப்படுத்துதலிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றைச் செயல்படுத்தி உரிமைகளை நிலைநாட்ட விழைகின்றது.

இந்நிறுவனம் ஆங்கில வழக்கறிஞர் பீட்டர் பென்சன் என்பவரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. 1960 இல் இரண்டு போர்ச்சுக்கீசிய மாணவர்கள் லிஸ்பன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது பல துன்பங்களுக்கு ஆளாயினர். எனவே பீட்டர் பென்சன் தன் துணைவர்களான எரிக்பேக்கர், லூயி கூப்பர் ஆகியோரின் உதவியுடன் செயல்பட்டார். அதன் முதல் முயற்சியாக எழுந்ததே இந்நிறுவனம். அதே

நேர்ம் கைதிகளின் நலனுக்காக செயல்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. இந்நிறுவனம் சுமார் 156 நாடுகளைச் சேர்ந்த பலதரப்பட்ட கைதிகளின் நலனுக்காகச் செயல்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

**நோக்கம்**

எத்தகைய முறையற்ற வன்முறைச் செயல்களிலும் ஈடுபடாமல் தம்முடைய சமூக, அரசியல் மற்றும் சமய நோக்கங்களை நிறைவேற்றினமைக்காக சிறைப்பட்ட கைதிகளை விடுவித்தல்.

சிறைச்சாலையில் கைதிகள் சித்ரவதைக்கு உள்ளாக்கப்படல், ம்னிதத்தன்மையின்றி நடத்தப்படல், பெண் கைதிகளைக் கொடுமைப்படுத்துதல், மரணதண்டனை ஆகியவற்றை எதிர்க்கப் பாடுபடுதல்.

அரசியல் கைதிகளின் விசாரணைகளை விரைவாக முடித்துத் தீர்ப்பு வழங்கச் செய்வது இதன் தலையாய நோக்கமாகும்.

**உறுப்பினர்கள்**

எழுத்தாளர்கள், மருத்துவர்கள், அரசுப் பணியாளர்கள், பெண் உரிமை பேணுபவர்கள், பள்ளி மாணவர்கள், முதியோர்கள் போன்ற பலரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களனைவரின் நோக்கம் ஒன்றேயாகும். மனித உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு வாழ்வளிக்க அரசுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இவ்வமைப்புக்கு உலகம் முழுவதிலும் சுமார் 4200 கூட்டுக் குழுக்கள் உள்ளன.

**தலைமையிடம் மற்றும் செயல்முறை**

இலண்டன் மாநகரம் இதன் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. இப்பன்னாட்டு அவைக்கான பிரதிநிதிகளை 45 நாடுகள் அனுப்புகின்றன. இங்குதான் செயல் திட்டம் தீட்டப்பட்டு, கொள்கை முடிவு எடுக்கப்படுகிறது. இதன் செயற்குழு ஒரு ஆண்டில் நான்கு முறை கூடி செயல்களை மதிப்பிடுகின்றது. தலைமைச் செயலரின் கீழ் இவ்வமைப்பு இயங்குகின்றது.

Scanned by TapScanner

**செயல்கள்**

உலகளவில் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இது கவனம் செலுத்துகின்றது. தேவையான முறையான தகவல்களைத் திரட்டுகின்றது. அதிகாரப்பூர்வமான தகவல்களைப் பெற ஒவ்வொரு நாட்டிற்கும் தேவையான குழுக்களை அனுப்புகின்றது. அவை நேரடியாகவும், பேட்டிகள் வாயிலாகவும் தகவல்களைச் சேகரிக்கின்றன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படும். கணக்கெடுப்புகளின் வாயிலாக துருக்கி, ஈரான், லிபியா, பாகிஸ்தான், சிலி போன்ற நாடுகளில் உரிமை மீறல் மிகுதி எனக் கூறப்பட்டுள்ளது. 1996 செப்டம்பரில் ஆப்கானியத் தலைவர்கள் தீவிரவாதிகளால் தூக்கிலிடப்பட்டதையும் பின்னர் பிணங்கள் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யப்படாமையையும் இது கண்டித்தது. 1998இல் கிரேக்க நாட்டில் காவல் நிலையத்தில் கைதிகளுக்கு மின்சார அதிர்வு கொடுத்ததைக் கண்டித்தது. 1995இல் பஹ்ரைன் நாட்டில் பாதுகாப்புக் காவலர்கள் இஸ்லாமியப் பள்ளிகளிலும் வீடுகளிலும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கொன்றது போன்றவற்றிற்கு எதிராக சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தது. உலகப் பெண்கள் மாநாடு 1995 இல் கூடியபோது பெண்கள் உரிமை பற்றி வலியுறுத்தியது. ஐக்கிய நாட்டவையின் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளின்படியான முறைப்படி விசாரணை, மரண தண்டனை போன்றவற்றைப் பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றது. பாகிஸ்தானில் பல நேரங்களில் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்களைத் தடுக்க வகை செய்தது. 1983 முதல் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை பற்றிய தன்னுடைய கருத்துக்களை வலியுறுத்தியது. உலகளாவிய நிலையில் பொது மன்னிப்பு நிறுவனம் முறைகேடுகள் பலவற்றைக் களைய முயல்கின்றது.

**இந்தியா**

இந்தியா விடுதலையடைந்தபின் படிப்படியாக மனித உரிமை மீறல்கள் மிகுந்தன. அதனால் பொது மன்னிப்பு நிறுவனம் இந்தியாவில் தனது பணிகளை ஆற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியப் பிரதமராக

Scanned by TapScanner

இந்திராகாந்தி பொறுப்பேற்ற பின்னர் பற்பல நிகழ்வுகள் நடந்தேறின. அவை உரிமை மீறல்கள் சார்ந்திருந்தன. 1974இல் மேற்கு வங்காளத்தில் நக்சலைட்டுகள் சிறைப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட சிக்கலில் இவ்வமைப்பு தலையிட்டது. 1975இல் இந்தியாவின் நெருக்கடி நிலை பிரகடனப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட கைதுகள் பற்றிய சிக்கல்களை இவ்வமைப்பு நீக்கியது. 1978இல் கொல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் இருக்கும் சிறைச்சாலைகளைப் பார்வையிட்டு கைதிகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமென்று இந்திய அரசுக்கு அறிவுரை வழங்கியது. 1980-81 ஆகிய ஆண்டுகளில் மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் சிறைக் கைதிகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமெனக் கூறியது. 1984இல் இந்திரா காந்தி கொல்லப்பட்டதால் பதிலுக்கு ஏராளமான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். வடகிழக்கு மாநிலங்களில் பாதுகாப்புப் படையினர் பெண்களைக் கொடுமைப்படுத்தியதைக் கண்டித்தது. இவ்வாறு பலநிலைகளில் உரிமை மீறல்களைக் கண்டிக்கும் அமைப்பாக பொதுமன்னிப்பு நிறுவனம் இயங்குகின்றது.

## செயல்முறைகள்

பன்னாட்டுப் பொது மன்னிப்பு நிறுவனம் மிக உன்னிப்பாக உரிமை மீறல்களைக் கண்டாய்ந்த பின்னரே திட்டவட்டமான முடிவுகளை அறிவிக்கின்றது. இலண்டனில் உள்ள தலைமையகம் பலவழிகளில் தேவைப்படும் தகவல்களை முறைப்படி சேகரிக்கின்றது. அச்செய்திகளின் உண்மைத் தன்மைகளைக் கண்டறிய பல சான்றுகளைப் பயன்படுத்துகின்றது. பிரிவினரும் நேரடித் தொடர்பு கொண்டு, அரசுகளுடன் கலந்தாலோசித்து முடிவுகளை அறிவிக்கின்றது.

பன்னாட்டுப் பொது மன்னிப்பு நிறுவனமானது பெயருக்கேற்ப பொது நிறுவனமாக இயங்குகின்றது. பல செயல்திட்டங்களின் வாயிலாகவும், தீர்மானிக்கப்பட்ட முடிவுகளின் வாயிலாகவும் சர்வதேச மனித உரிமை மீறல்கள் அறிவிக்கப்படுகின்றன. குழுக்களும் மற்றும்

தனிப்பட்ட பிரதிநிதிகளும் நியமிக்கப்பட்டு தகவல்கள் திரட்டப்படுகின்றன. அனைத்துலக சமுதாய மக்களின் உரிமைகளைக் காக்கும் அடிப்படையில் செயல்படுகின்றது. பல நாடுகளிலும் உரிமைக்கான அறைகூவல்கள் பலவழிகளில் விடப்படுகையில் இந்த அரசு சாரா நிறுவனம் உரிமைகளுக்காகத் தன்னுடைய பணிகளை ஆற்றுகின்றது.

இந்நிறுவனத்தின் பணத் தேவைகள் அவ்வமைப்பின் உறுப்பினர்களும் ஆதரவு நாடுகளும் தரும் நன்கொடையைச் சார்ந்தே உள்ளன. நன்கொடைகளுடன் கட்டணங்களும் பெறப்படுகின்றன. அரசியல் சார்ந்த அமைப்பு இல்லையென்பதால் இது எதிர்ப்புகளற்ற அமைப்பாக உள்ளது. எந்த ஒரு அரசாங்கத்தையும் அரசியல் கட்சியையும் சார்ந்ததல்ல. கைதிகளின் உரிமையைக் காப்பதுதான் இதன் கொள்கையே அன்றி அவர்களது கொள்கைகளையோ கோட்பாடுகளையோ காப்பது அல்ல. அனைத்து வழக்குகளிலும் மனித உரிமைகளைக் காப்பதை அடிப்படை நோக்கமாகக் கொண்டது. இந்நிறுவனம் ஒவ்வொரு ஆண்டிலும் பல்வேறு நாடுகளில் நடைபெறும் உரிமை மீறல்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றது. இவ்வமைப்பின் துலங்கல்கள் தெளிவாகத் தீர்மானிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதன் செயல்களைப் பற்றிய ஆண்டறிக்கை ஆண்டுதோறும் ஆங்கிலம், அராபி, பிரெஞ்சு, ஸ்பானிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது.

பன்னாட்டுப் பொது மன்னிப்பு நிறுவனத்தில் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். 192 நாடுகள் உறுப்பு நாடுகளாய் உள்ளன. 4149 குழுக்கள் உள்ளன. பாரபட்சமின்றி மனிதத்தன்மையோடு மனிதாபிமான அடிப்படையில் சமத்துவ நோக்கில் செயல்படுகின்றது. இந்த அமைப்பு ஐக்கிய நாட்டவையின் மனித உரிமை பற்றிய கொள்கைகளுக்குச் சாதகமாகச் செயல்படுகின்றது. உலக அளவில் மதிப்பும், சிறப்பும் பெற்ற இவ்வமைப்பு 1977இல் உலக சமாதானத்திற்கு ஆற்றிய தொண்டுக்காக நோபல் பரிசு பெற்றது. 1978இல் ஐக்கிய நாட்டவையின் மனித உரிமைப் பரிசைப் பெற்றது.

**மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனம்**

தன்னிச்சையாகச் செயல்படும் மனித உரிமைகள் மீறல் தடுப்பு நிறுவனங்களுள் மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனமும் ஒன்று. 1978இல் ஹெல்சிங்கியில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம் அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்காசியா போன்ற நாடுகளில் செயல்படுகிறது. வாஷிங்டன், நியூயார்க், லாஸ் ஏஞ்செல்ஸ், இலண்டன், பிரஸ்ஸெல்ஸ், மாஸ்கோ, முதலிய இடங்களில் இதன் அலுவலகங்கள் உள்ளன. மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தும் இந்நிறுவனம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உரிமைகளையும் கண்காணிக்கின்றது.

**ஆசியா கண்காணிப்பு**

மனித உரிமைகளைப் பாதுகாத்தல், மனித உரிமை மீறல் தடுப்பு முயற்சிகளை மேற்கொள்ளல் என்ற நோக்கங்களை உடையது. ஆசியா கண்காணிப்பானது, திபெத் தகவல் மையத்தின் உதவியுடன் திபெத்தில் சீனாவின் ஆக்கிரமிப்பு உரிமை மீறல்களை வெளிக்கொணர்ந்தது. இந்தியாவில் இவ்வமைப்பின் செயல்பாடுகள் 1993க்குப் பின் மிகுதியாயின. 1993இல் டெல்லியில் மனித உரிமை நிலைநாட்டலுக்கான கூட்டமொன்றைக் கூட்டியது. காஷ்மீரில் மனித உரிமை மீறல்களை ஆய்வு செய்கின்றது. மருத்துவம், காவல் மற்றும் நீதித் துறைகளின் உரிமைகளுக்காகச் செயல்பட்டது. அதைப் போல உல்ஃபா தீவிரவாதிகளின் செயல்கள் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்களைப் பற்றிக் கூறுகின்றது. 1992இல் அஸ்ஸாமில் சாதாரண பொது மக்களை உல்ஃபா தீவிரவாதிகள் என்று ஐயப்பட்டனர். பெண்கள், நீதிபதிகள் போன்ற பலரும் துன்புறுத்தப்பட்டனர். உரிமை மீறல்களால் மரணம் சாதாரணமானதாயிருந்தது. ஆசியா கண்காணிப்புக் குழுவின் முயற்சியாலும் அஸ்ஸாம் மாணவர்கள், அரசியல் கட்சிகள் ஆகியோரின் முயற்சியாலும் அஸ்ஸாம் அரசு விசாரணைக்கு ஆணையிட்டு உரிமை மீறல்களைத் தடுத்தது.

Scanned by TapScanner

காஷ்மீரின் ஃபரூக் அப்துல்லா சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு அங்குள்ள மனித உரிமை மீறல்கள்தான காரணமென ஆசிய கண்காணிப்பு நிறுவனம் குறிப்பிட்டது. அக்கொலைக்குக் காரணமான ஜய்பால்சிங் என்பவர் கொடுமையாக நடத்தப்படுகின்றாரெனக் கூறப்பட்டது. அதனை ஆசிய கண்காணிப்பு நிறுவனம் வெளிப்படுத்தியமையால் 16, செப்டம்பர் 1993இல் ஜய்பால் சிங் விடுதலை செய்யப்பட்டார்.

மேற்கண்டவாறு ஆசியா கண்காணிப்பின் பணிகளால் ஆசியப் பகுதிகளில் இழைக்கப்பட்ட உரிமை மீறல்கள் முறியடிக்கப்பட்டன.

## அமெரிக்கா கண்காணிப்பு நிறுவனம்

இந்த அரசு சாரா அமைப்பு 1981இல் தொடங்கப்பட்டது. இவ்வமைப்பால் தென் அமெரிக்கா, மத்திய அமெரிக்கா, கரீபியன் கடல் நாடுகள் போன்றவற்றில் ஏற்படும் உரிமை மீறல்கள் கண்காணிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவில் நிகழும் மனித உரிமை மீறல்களைக் கண்காணிக்க சட்ட நிபுணர்களடங்கிய குழு ஒன்று செயல்படுகின்றது. அமெரிக்காவுக்குச் செல்லும் அகதிகள் விவகாரங்களில் உதவி செய்கின்றது.

## ஹாட்லைன் தொடர்பு

நாடுகளுக்கிடையேயான நேரடிச் செய்தித் தொடர்பே ஹாட்லைன் எனப்படும். அமெரிக்க, ரஷ்ய அதிபர்கள் ஹாட்லைன் தொடர்புகளைப் பயன்படுத்தி பனிப்போர் சூழலுக்குத் தீர்வுகாண முற்பட்டார்கள். இம்முறையானது இந்தியாவில் முதன்முறையாக மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்த போது கொண்டு வரப்பட்டது. சீனாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே இன்று தொடர்புகள் உள்ளன. அரசு மற்றும் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்களுக்கு இடையில் தொடர்புகளை உருவாக்க இம்முறை பெரிதும் பயன்படுகின்றது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் மனித உரிமை மீறல் பற்றிய செய்திகளை விளக்கித் தீர்வு காணவும் ஹாட்லைன் தொடர்பு பயனுள்ளதாகும்.

Scanned by TapScanner

ஹாட்லைன் ஆசியா என்ற அமைப்பு 16, ஜுலை 1980 முதல் செயல்படுகிறது. முற்போக்கு மக்களுக்கான நிறுவனமான இக்குழுவானது பலநாடுகளின் அரசுசாரா அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு செயல்படுவதுடன் பலநாடுகளுக்குத் தேவையான தகவல்களையும் தந்து உதவுகின்றது.

**மனித உரிமைகளுக்கான பன்னாட்டுத் தொண்டு நிறுவனம்**
(International Service for Human Rights 'ISHR')

1984இல் ஜெனீவாவில் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு எவ்விதமான எதிர்பார்ப்புமில்லாத ஒரு தொண்டு நிறுவனமாகும். இவ்வமைப்பு ஐக்கிய நாட்டவையின் வாயிலாக மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், பெறவும் வகை செய்கின்றது. மனித உரிமைகளுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகின்றது. "Human Rights Monitor" என்ற செய்தித்தாளை உருவாக்கி நடத்துகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ள துணை நிற்கின்றது. அரசு சாரா அமைப்புகளுக்கான வழிமுறைகளையும் அது விளக்குகின்றது.

**செஞ்சிலுவைச் சங்கம்**

1828 இலிருந்து 1910 வரை வாழ்ந்த, சுவிட்சர்லாந்து நாட்டினரான ஜான் ஹென்றி டுனான்ட் என்பவர் 1859 இல் ஆஸ்திரியா, பிரான்சு, சார்டீனியா ஆகிய நாடுகளுக்கிடையிலான சால்பரினோ போர்க்களத்தைக் கண்டார். போரால் ஏற்பட்ட இழப்புகளையும் காயமுற்றோர் அடைந்த துன்பங்களையும் கண்ட டுனான்ட் தனது ஸால்பரினோ நினைவுகள் என்ற நூலின் வாயிலாகத் தமது உள்ளக் கிடக்கையை வெளியிட்டார். போர் வீரர்களைக் காக்கவும் துன்பமுறும் வீரர்களுக்கு உதவி செய்ய நிவாரணம் வழங்கவும் பன்னாட்டளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று அவர் கூறினார். அதற்காக 1863 இல் ஒரு ஐவர் குழு உருவாக்கப்பட்டு ஜெனீவா நல் வாழ்வுச் சங்கம் என்ற பெயரில் செயல்பட்டது. இதன் முதல் கூட்டம்

26, அக்டோபர் 1863இல் ஜெனீவாவில் கூடியது. 16 நாடுகளின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். அவர்களது முயற்சியால் பயிற்சி பெற்ற தொண்டர்களின் அமைப்பை உருவாக்க அரசு உதவுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஒவ்வொரு நாட்டு செஞ்சிலுவை அமைப்பும் அந்நாட்டு இராணுவத்துடன் இணைந்து பணிபுரிய வேண்டுமெனப்பட்டது.

8, ஆகஸ்டு 1864இல் சுவிட்சர்லாந்தில் கூடிய இரண்டாம் மாநாட்டில் போரில் காயமுற்றோர், போர்க் கைதிகள் பரிமாற்றம் பற்றிய செய்திகள் இடம்பெற்றன. 22 ஆகஸ்டு 1864இல் முதல் ஜெனீவா ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. போரில் உதவும் செஞ்சிலுவைப் பிரிவினர் வெள்ளை கைப்பட்டையை அணிந்து கொள்ளலாம் எனப்பட்டது.

மனிதநேயம், பாரபட்சமில்லாத நடுநிலைமை, தனித்தன்மை, தன்னார்வத் தொண்டு, ஒருமைப்பாடு, பன்னாட்டுப் பண்பு போன்ற அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு அவ்வமைப்பு செயல்படுகின்றது. இவற்றின் மூலம் துன்புறுவோர்க்குத் தேவையான பாதுகாப்பு உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றன. அதனால் மனிதாபிமானத்துடன் மனிதநேயம் பேணிக் காக்கப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போருக்குப்பின் இச்சங்கம் வலிமையும் விரிவாக்கமும் பெற்றது. நான்கு ஜெனீவா ஒப்பந்தங்களடிப்படையில் இதன் செயல் திட்டங்கள் அமைந்துள்ளன. 12, ஆகஸ்டு, 1949 முதல் மேற்கொள்ளப்பட்ட நான்காம் ஒப்பந்தப்படி போரில் ஈடுபடும் நாடுகளின் பொதுமக்களைப் பாதுகாக்கவும், போர் வீரர்கள், குடிமக்கள் ஆகியோரின் உரிமைகளைப் பாதுகாக்கவும் வாய்ப்புகள் தரப்படுகின்றன. 8, ஜூன் 1977இல் குறிப்பிட்ட புதிய விதிமுறைகள் இணைக்கப்பட்டன. ஜெனீவா உடன்படிக்கைகளின் வாயிலாக மனிதர்களின் தன்மை, மரியாதை அவற்றைக் காக்க வேண்டிய தேவை ஆகியன உணர்த்தப்பட்டுள்ளன. போர்களின் போது பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாதென்றது. போர்க்கைதிகளை நடத்தும் முறைகளையும் ஜெனீவா ஒப்பந்தம் குறித்தது. இவ்வாறு செஞ்சிலுவைச் சங்கம் என்ற பன்னாட்டளவினாலான தொண்டு ...ம் சிக்கலான நேரங்களில் மனித உரிமைகளைக் காக்கிறது.

## இந்தியாவில் செஞ்சிலுவைச் சங்கம்

இந்தியாவில் செஞ்சிலுவைச் சங்கம் 1920 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. டில்லியில் தலைமையகத்தைக் கொண்டுள்ள இவ்வமைப்பு 650க்கு மேற்பட்ட கிளைகளை நாடு முழுவதும் கொண்டுள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர் இதன் தலைவர். 1920 நவம்பரில் சென்னையில் அதன் கிளை உருவாக்கப்பட்டது. தமிழகத்தில் 29 மாவட்டக் கிளைகள் உள்ளன. தமிழக ஆளுநர் இவ்வமைப்பின் முதல்வராகத் திகழ்கின்றார். கல்லூரிகளில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் (Youth Red Cross) பள்ளிகளில் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் (Junior Red Cross) ஆகியன செயல்படுகின்றன. மனிதர்களைப் பலவித இன்னல்களிலிருந்து பாதுகாப்பது அவற்றின் தலையாய கடமையாகும்.

## வாழ்வியல் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம்

(Peoples Union for Civil Liberties)

இந்த அரசு சாரா நிறுவனத்தை 1976இல் ஜெயப்பிரகாஷ் நாராயண் தோற்றுவித்தார். காவல்துறை அத்துமீறல், பெண்கள் மீதான வன்முறை, சிறைச்சாலை மரணம், சிறுபான்மையினர் ஒடுக்கப்படல் போன்ற செயல்களால் பாதிக்கப்படும் உரிமைகளை மீட்க இந்த அமைப்பு இயங்குகிறது. அத்தகைய முறைகேடுகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவற்றைக் களையுமாறு கேட்டுக்கொள்கின்றது. இது கீழ்க்கண்ட பணிகளை ஆற்றியது:

உத்திரபிரதேசத்தில் காவல் துறையினர் ஏழை மக்களின் மீது நடத்திய கொடுமைகளை வெளிப்படுத்தியது. அஸ்ஸாமில் 1982இல் நடந்த மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டியது. 1983இல் சிவகாசியில் இருந்த குழந்தைத் தொழிலாளரின் நிலையை எடுத்தியம்பியது. 1984இல் இந்திராகாந்தி கொல்லப்பட்ட பின் நிகழ்ந்த நிகழ்வுகளில் யார் குற்றவாளி என்று அறிக்கை அளித்தது. 1984-85இல் தடுப்புச் சட்டங்கள் என்ற அறிக்கையின் வாயிலாக காவல் முறைகேடுகளைச் சுட்டிக்காட்டியது. 1987இல் ராசிப்புரா,

மீரட் போன்ற இடங்களில் நடைபெற்ற மதக் கலவரங்கள் குறித்து அறிக்கை வெளியிட்டது. 1990இல் காஷ்மீரில் நடந்த மனித உரிமை மீறல்களைப் பற்றி அறிக்கை வெளியிட்டது. 1998இல் ஆஜ்மீர், காஷ்மீர் போன்ற பகுதிகளில் மதத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட குறைபாடுகளை அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டியது. 2003இல் தமிழக அரசு ஊழியர்களின் போராட்டத்தின் போது அரசு மேற்கொண்ட மனிதஉரிமை மீறல்களை வெளியிட்டது.

மக்களுக்கு சமூக நீதியை வழங்கி மனித உரிமைகளைப் பெறச் செய்வது இவ்வமைப்பின் அடிப்படை நோக்கமாகும். உரிமைகளைப் பாதுகாப்பதில் இதன் பங்கு மகத்தானதாகும்.

**மக்களாட்சி உரிமைக்கான மக்கள் ஒன்றியம்**

[ Peoples Union for Democratic Rights (PUDR) ]

இந்தியாவில் மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்ட இவ்வமைப்பு டில்லியில் செயல்படுகின்றது. 1976இல் உருவான இவ்வமைப்பு மக்களாட்சி மற்றும் வாழ்வியல் உரிமைகளைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகின்றது. ஆந்திராவில் முன்னாள் முதலமைச்சர் என்.டி. ராமராவ் காலத்தில் நடைபெற்ற அத்துமீறல்கள் பற்றிய செய்திகளை வெளியிட்டது. 1983இல் சேயா மாவட்டத்தில் மஸ்தூர் கிஸான் சம்ஹாரிஸி சமிதி என்ற அமைப்பைச் சேர்ந்த விவசாயிகள் கொல்லப்பட்டனர். அத்துடன் 1984 இல் இவ்வமைப்பு அப்போது நடைமுறையில் இருந்த சட்டங்களை கறுப்புச் சட்டங்கள் என விவரித்தது. மனித உரிமைகளைப் பாதுகாக்க இந்த அமைப்பு பல சிறப்புப் பணிகளை ஆற்றுகின்றது.

**மக்கள் கண்காணிப்பு நிறுவனம்** (People's Watch, Madurai)

மனித உரிமை மீறல்களைக் கண்காணித்து, தகுந்த நடவடிக்கையின் மூலம் அவற்றைத் தடுக்க இவ்வமைப்பு 10, டிசம்பர் 1995 முதல் மதுரையிலிருந்து செயல்படுகிறது. மனித உரிமை மீறல்களுக்கு அரசு முடிவு கட்டவேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது.

Scanned by TapScanner

மக்களிடையே மனித உரிமை விழிப்புணர்வு ஊட்டப்பட வேண்டுமென்பதில் கவனம் செலுத்துகின்றது. குழுக்கள், உயர்மட்டக் குழுக்கள், மாமண்டல மற்றும் மண்டலக் குழுக்கள், பொது விசாரணைகள் ஆகியவற்றின் மூலம் பணியாற்றுகிறது. உரிமை மீறல் சிக்கல்களிலிருந்து நிவாரணம் பெறவும், மருத்துவ உதவி பெறவும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. பள்ளி மாணவர்களிடையே மனித உரிமைகள் பற்றிய உணர்வை உருவாக்குகின்றது. ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதன் வாயிலாக உரிமை மீறல்களைத் தடுக்க வகை செய்கிறது.

12 ஒருங்கிணைப்பாளர்கள், 12 வழக்கறிஞர்கள் செயல்படக்கூடிய 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு தமிழ்நாட்டில் இது செயல்படுகிறது. இந்நிறுவனம் தான் முதன் முறையாக மனித உரிமைக் கல்வியை பள்ளிகளின் பாடப்பகுதியில் இணைத்தது. கல்லூரி மாணவர்களுக்கும் மனித உரிமை பற்றிய செய்தியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. "Dalit Monitor" என்ற செய்தி இதழை வெளியிடுகின்றது. பயிற்றுவிக்கப்பட்ட ஆர்வலர்கள் மூலம் உரிமை மீறல்கள் கண்காணிக்கப்படுகின்றன. பன்னாட்டு மனித உரிமைச் சட்டங்கள், ஐ.நா அவையின் உடன்படிக்கை ஆகியவற்றின் மூலம் உரிமை மீறல்களைத் தடுக்கின்றது. அம்மீறல்கள் பற்றிய செய்திகளை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை தொகுத்து அறிக்கையாக வெளிப்படுத்துகிறது.

இக்கண்காணிப்பு அமைப்பு 6, வல்லபாய் சாலை, சின்ன சொக்கிகுளம் மதுரை 625002 என்ற இடத்திலிருந்து செயல்படுகின்றது. அங்கு நேரடியாகவோ 0452 2539520, 0452 2531874 ஆகிய தொலைபேசி எண்களிலோ கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

இவ்வாறு முறைசாரா அமைப்புகள் பல மனித உரிமைகளைப் பாதுகாக்கப் பணியாற்றுகின்றன. அவை பல வழிகளில் மேலே குறிப்பிட்டவாறு செயல்படுகின்றன.

Scanned by TapScanner

# 25

## மனித உரிமை ஊடகங்களும் சுற்றுச்சூழலும்

### (Human Rights - Media and environment)

இந்திய அரசியலமைப்பின் விதி 19(1) கருத்து வெளியிடும் உரிமை மற்றும் பேச்சுரிமையை வழங்குகிறது. அதைப்போல அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் தனது 19ஆம் விதிப்படி கருத்து சுதந்திரமும் ஊடகங்கள் வாயிலாகச் செய்தி வெளியிடவும் உரிமை தந்துள்ளது. இவை எல்லாம் மனித உரிமையைப் பாதுகாக்கின்றன.

பத்திரிக்கைகளின் தலையங்கங்கள், கட்டுரைகள், கருத்துப் படங்கள் போன்றவற்றின் வாயிலாக உரிமைகளைப் பற்றிய செய்திகளை வெளியிடலாம். அரசின் செயல்கள் ஊன்றிக் கவனிக்கப்பட்டு உரிமை மீறல்கள் தடுக்கப்பட வகை செய்யப்படுகின்றது. ஒரு செயலில் ஏற்படக்கூடிய சிக்கல்களை ஊடகங்கள் முன் கூட்டியே தெரிவிக்கின்றன. அரசில் மாற்றங்களை உருவாக்க அரசியல் மாற்றங்களையும் சுட்டிக் காட்டுகின்றது. தற்காலத்தில் மின் அணு சார்ந்த ஊடகங்கள் வலுப்பெற்றுள்ளன. தொலைக்காட்சி, தகவல்வலை, கணினி போன்றவை உரிமை மீறல் பற்றிய செய்திகளை எளிதில் உடனுக்குடன் அறிந்து கொள்ள உதவுகின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள் மக்களிடையே தாக்கத்தையும் விழிப்புணர்வையும் உண்டாக்குகின்றன. அனைத்து ஊடகங்களும் குழந்தைகள், பெண்கள், நலிவுற்ற பிரிவினர், ஏழை எளியோர் ஆகியோரின் உரிமை மீறல்களைப் பற்றிக் கூறுகின்றன. ஏராளமான சர்வதேச பத்திரிக்கைகளும் உரிமை மீறல்களைப் பற்றித் தெளிவாகச் செய்தி வெளியிடுகின்றன. நியூயார்க் டைம்ஸ், (அமெரிக்கா) சன்டே டைம்ஸ் (இங்கிலாந்து), ரெட்பிளாக் (சீனா), டொராண்டோ ஸ்டார் (கனடா), மார்னிங் நியூஸ் (ஸ்ரீலங்கா) போன்றவற்றை சான்றுகளாகக் கூறலாம். இவற்றைப் போன்றே இந்தியாவில் பல வட்டார மொழிப் பத்திரிக்கைகள் உள்ளன. பத்திரிக்கை சுதந்திரத்தைப் பாதுகாக்க அரசு பல வழிகளைப் பின்பற்ற வேண்டும். பத்திரிக்கைகளை அவமதிப்பதும், அதற்குத் துயரங்கள் தருவதும் தவிர்க்கப்பட வேண்டும். சீனா, பிரேசில், அல்பேனியா, துருக்கி போன்ற நாடுகளில் பத்திரிக்கையாளர்கள் முறைகேடாக நடத்தப்பட்டு அவர்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. இந்தியாவில் 1975இல் நெருக்கடி நிலை பிரகடனத்தில் பத்திரிக்கைகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாயின. தணிக்கை என்ற பெயரில் அவர்களுடைய உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

தமிழகத்தில் தராசு, நக்கீரன், தினகரன், தினமலர் போன்ற பத்திரிக்கைகள் தாக்கப்பட்டு அவற்றின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. எனவே அத்தகைய மீறல்கள் கட்டுப்படுத்தப்பட்டு பத்திக்கைகளின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். போஃபர்ஸ் ஊழல் பற்றிய விபரங்களை Hindu பத்திரிகை வெளியிட்டது. 1979இல் Express நிருபர் டெல்லி திஹார் சிறைச்சாலையைப் பற்றி நான்கு கட்டுரைகளை வெளியிட்டார். 1992இல் சிதம்பரம் காவல் நிலையத்தில் பல அநியாயங்கள் நடத்தப்பட்டு உரிமை மீறல்கள் நிகழ்த்தப்பட்டன. அதைப்போல சந்தனக் கடத்தல் வீரப்பனைப்

Scanned by TapScanner

பற்றிய செய்திகளால் உரிமை மீறல்கள் ஏற்பட்டன. இவையனைத்தும் உரிமை மீறலுக்கு ஆதரவானவையாயிருப்பினும் உரிமை மீறல்களைப் பற்றி மக்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பாயுள்ளன.

பத்திரிக்கைகளைப் போல, திரைப்படங்களும் பல உண்மைகளை மக்களுக்குக் காட்டும் கருவிகளாக உள்ளன. மனித உரிமை மீறல், அரசியல் சிக்கல்கள் போன்ற பல செய்திகளை அவை மையக் கருவாகக் கொண்டு செயல்படுகின்றன. அரசியல் சீர்திருத்தம், சமூக மேம்பாடு, சாதிக் கலவரங்கள், இனச் சிக்கல்கள், பொருளாதாரச் சுரண்டல், தீண்டாமை, கொத்தடிமை, பாலியல் மோதல்கள், பெண்களையும் குழந்தைகளையும் பற்றிய செய்திகள், காவல் துறையின் செயல்பாடுகள் போன்ற கருத்துக்கள் திரைப்படங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. திரைப்படங்கள் மனித உரிமைகளையும் உரிமை மீறல்கள் போன்ற கருத்துக்களையும் மக்களுக்கு உணர்த்துகின்றன. அரசியல்வாதிகளின் உரிமை மீறல்களை பல படங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பெண்ணுரிமையைப் பற்றிய செய்திகளும் வெளியிடப்படுகின்றன. தொலைக்காட்சிச் செய்திகள், தொடர்கள், வானொலிச் செய்திகளின் வாயிலாக பல உரிமை மீறல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மனித உரிமைகள் மற்றும் உரிமை மீறல்களைப் பற்றி ஊடகங்கள் படம்பிடித்துக் காட்டும்போது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுகின்றது. இத்தகைய தகவல் அமைப்புகள் பாமர மக்களையும் மனித உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளச் செய்கின்றன. செய்தித்தாள்கள் தரும் செய்திகளை படித்தவர்கள் மட்டுமே படித்துத் தெரிந்து கொள்வர். ஆனால் திரைப்படம், தொலைக்காட்சி போன்றவை படிக்காத பாமர மக்களையும் கவர்ந்து பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வகை செய்கின்றன.

இந்திய அரசியலமைப்பின் 42 -ஆம் சட்டத்திருத்தத்தின் வாயிலாக இந்திய மக்களின் கடமைகள் என்ற 51-A பிரிவில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மக்களின் கடமை எனக் கூறப்பட்டது. நீதிமன்றமானது, மனித உரிமைகள் பாதிக்கப்படும் போது தலையிட்டு நீதியை நிலைநாட்டுகின்றது. தொழிற்சாலையிலிருந்து விஷ வாயு கசிந்து பரவி பலர் இறந்தபோது அவர்களுக்கு இழப்பீடு தர உத்தரவிட்டு சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் உரிமையையும் கடமையையும் சுட்டிக் காட்டியது. இயற்கைச் சூழலைப் பேணிக் காப்பதில் அடிப்படை உரிமையின் முக்கியத்துவத்தை நாம் உணரவேண்டும். 1970-இல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது. சட்டத்தை மீறுவோர் யாவரும் தண்டனைக்குள்ளாவர் என்பதை அந்நிறுவனம் தெளிவுபடுத்தியது. சுற்றுச்சூழல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல சட்டங்கள் மனித உரிமைகளைப் பற்றியும் கடமைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. சுற்றுச்சூழலைப் பாதுகாத்து அதன்மூலம் நல்வாழ்வைப் பெற அனைவருக்கும் உரிமையுண்டு என்பதன் மூலம் சுற்றுச்சூழலுக்கும் உரிமைகளுக்கும் இடையிலான தொடர்புகளை உணரலாம்.

– – –



Scanned by TapScanner